விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka
வலம்புரி
Valampurii
பக்கங்கள்: பன்னிரண்டு
சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 23 செவ்வாய்க்கிழமை (07.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 78

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


# நேரடிப் பேச்சில் கலந்து கொள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு

## ஜனாதிபதி நேற்று உறுதி

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இனி வரும் காலங்களில் நடைபெறும் பேச்சுக்களில், அது தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுடனான 2 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடிந்தமையானது அரசியல் கட்சிகளின் அர்ப்பணிப்பின் மூலமே என ஜனாதிபதி கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## ஜெனீவாக் கூட்டறிக்கையினை ஜே.வி.பி.-ஹெல உறுமய நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஜெனீவாவில் ஏற்பட்ட இணக்கப்பாட்டினை ஜே.வி.பியும்,ஹெல உறுமயவும் தனித்தனியாக அறிக்கைகளை வழங்கி நிராகரித்துள்ளன.

நேற்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் வைத்தே நிராகரிப்பு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில் ஏனைய அரசியல்கட்சிகளின் தலைவர்கள் இதில் பங்கு பற்றினர்.

அங்கு அரசாங்கக்குழுவிற்கு தலைமை ஏற்று சென்ற நிமால் சிறிபால டி சில்வா விளக்கங்களை அளித்தார்.

அங்கு உரையாற்றிய சோமவன்ச அமரசிங்க (ஜே.வி.பி) ஜெனீவாப்பேச்சுக்கள் மகிந்த சிந்தனையை அனுசரித்து நடைபெற்றிருக்க வில்லை.

நோர்வேயின் விருப்பங்களின்படிதான் நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை நோர்வே வென்று கொடுத்திருக்கிறது. ஜெனீவாவில் ஏற்றுக்கொண்டபடி ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப் படவேண்டுமென்றால். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தலைமைப் பதவியிலிருந்து சந்திரிகா தற்காலிக விலகல்

### பதில் தலைவராக ரட்ணசிறி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளார். இது தொடர்பாக கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதமென்றினை அனுப்பி வைத்துள்ளார்.



அடுத்து வரும் சில மாதங்களுக்கு கட்சியின் தலைமைப் பொறுப்பில் கடமையாற்ற முடியாத நிலை காணப்படுவதாலேயே தான் தற்காலிகமா விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தான் விலகியிருக்கும் காலப்பகுதியில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பதில் தலைவராக நியமித்துள்ளதாகவும் கட்சியின் தலைவருக்கு கட்சியின் யாப்பின்படி உள்ள அதிகாரத்திற்கு அமைவாக பிரதமர் ரட்ணசிறியை நியமித்ததாகவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் உப தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் கடந்த மூன்று மாத காலங்களாக எதுவித காரணங்களும் இன்றி தமக்குப்பிரச்சினைகளை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப் பிரச்சினைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்பால் பாடசாலைகள் நேற்று செயலிழந்தன

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கண்டித்தும் மாணவர்கள் மீதும் கல்விச் சமூகத்தினர் மீதும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறைகளைக் கண்டித்தும் நேற்று மாணவர்கள் பகிஷ்கரிப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் யாழ்.குடாநாட்டு பாடசாலைகள் அனைத்தும் வெறிச் சோடிக் காணப்பட்டன.

ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்ற போதிலும் மாணவர்களின் வரவு இன்மையால் அவர்கள் திரும்பிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேபோன்று யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம், தொழில்நுட்பக்கல்லூரி மற்றும் தனியார் கல்வி நிலையங்களும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகள் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றை சேர்ந்த தமிழ் பேசும் மாணவர்கள் அனைவரும் தமது வகுப்புக்களை பகிஷ்கரிப்பதன் ஊடாக இராணுவத்தினருக்கும் படைத்தளபதிகளுக்கும் ஒரு செய்தியை கூறியிருக்கின்றார்கள் என யாழ்.மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் ஆயுதக்குழு செயற்படவில்லை-ஹக்கீம்

(கொழும்பு)

ஜெகாத் என்ற முஸ்லிம் ஆயுதக்குழு ஒன்று இலங்கையில் இல்லையென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலேயே அவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களின் படகு மீது கடற்படையினர் சூடு

### எழிலன் க.கா.குழுவிடம் முறையீடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான திருகோணமலை இலக்கந்தையில் இருந்து மாங்கேணி வரையான மூதூர் கிழக்குப் பகுதிக்குள் அத்துமீறி உள் நுழைந்த கடற்படையினர் மீனவர்கள் மீதுதுப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இலக்கந்தைக்கு அருகில் உள்ள கொட்டடிக் கடற்பரப்பில் கரையில் இருந்து 200 மீற்றர் தொலைவில் எட்டுப்படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக கண்காணிப்புக்குழுவிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுநீரகம் செயலிழக்க காரணங்கள் என்ன?

## மருத்துவ விளக்கம்

டாக்டர் நா.மோகன்தாஸ்

மனித உடலில் மிக முக்கியமான உறுப்புகளில் சிறு நீரகமும் ஒன்று. உடலிலுள்ளகழிவுப்பொருட்களை சிறுநீராக வெளி யேற்றுவது தான் சிறுநீரகத்தின் செயல் என்று பெரும்பாலும் அறியப்பட்டுள்ள



செய்தி. ஆனால்நமது உடலிலுள்ள எலும்புகளின் வளர்ச்சிக்கும். இரத்த அபிவிருத்திக்கும். உடலின் அமிலத்தன்மையினை ஒரே சிராக நிலை நிறுத்துவதற்கும் சிறுநீரகமே முக்கிய செயல்பாட்டுக்கருவி.

*சிறுநீரகப் பாதிப்பு*

சிறுநீரகப் பாதிப்பு மற்றும் அது தொடர்பான நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்ற நோய்களால் பாதிக்கப்படுபவர்களுடன் ஒப்பிடும்போது அதிகரித்து வருகிறது.

நமது விலாவின் பின்புறத்தில் பக்கத்திற்கு ஒன்றாக உள்ள இரண்டு சிறுநீரகங்கள் இரண்டு வகையான செயலிழப்புக்கு ஆளாகின்றன.

1. திடீரென வரும் சிறுநீரகச் செயலிழப்பு (Acute Renal Failure)

2. நீரிழிவு நோய் உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குச் சரியான, முறையான சிகிச்சை செய்து கொள்ளாமையால் நாளடைவில் சிறுநீரகங்கள் பாதித்துச் செயலிழப்பது (Chronic renal Failure).

*திடீரென ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு*

நன்றாக இயங்கிக் கொண்டிருந்த சிறுநீரகங்கள் திடீரென தங்களதுசெயல்தன்மையினை இழக்க நேரிடலாம். இதற்கான காரணங்களைப் பொருத்தவரை வயிற்றுப்போக்கு. பாம்புக்கடி, விஷ வண்டுக்கடி, மலேரியா, லெப்டோஸ்பைரோசிஸ் என்ற உயிர்க் கொல்லி நோய், ஒவ்வாத மாத்திரைகளை உட்கொள்ளுதல், பிரவச காலங்களில் ஏற்படுகின்ற அதிக இரத்தப் போக்கு, கருக் கலைப் பின் போது சிறுநீரகச் செயல் பாதிப்பு என்று வரிசைப்படுத்தலாம்.

*பாம்புக்கடி*

வயல்களில் வேலை செய் கின்ற போதும், கிராமப்புறங்களில் வழக்கமாக உள்ள திறந்த வெளிகளில் படுத்து உறங்கும் போதும் பாம்புக்கடியினால் பாதிக்கப்படுபவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். நல்ல பாம்பு கடித்தால் அதனுடைய விஷம் நரம்பு மண்டலத்தை தாக்கி மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறக்க நேரிடுகின்றது. கட்டுவிரியன், கண்ணாடிவிரியன், சுருட்டைப் பாம்புகள் கடித்தால் இரத்தமுறிவு ஏற்பட்டு சிறு நீரகங்கள் பாதிக்கப் படுகின்றன. கட்டு விரியன் பாம்பு கடித்து அதற்குரிய விஷ எதிர்ப்பு ஊசியினை குறித்த அளவு போட்டுக் கொள்ளாதது. பல்வேறு மூட நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டு முறை



யான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்துவது போன்ற காரணங்களால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு செயலிழப்புக்கு ஆளாகின்றனர். கடிபட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டு. சிறுநீர் பிரியாமலும், சிறுநீர் சிவப்பாகவும் வெளியேறுகின்ற சிறுநீரின் அளவு குறைவான நிலையில் மூச்சுத் திணறலுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

*புதிய சிகிச்சை முறை*

பாம்புக்கடியினால் பெரியவர்கள் மட்டுமல்லாது சிறிய குழந்தைகளும் பாதிக்கப்படுகின்ற னர். தூங்குகின்ற போதும், கால்நடைகளுக்குப் புல் சேகரிக்கும் போதும், பெற்றோர்களுக்கு வயலில் உதவி செய்கிற போதும், சிறுவர்கள் கூட பாம்புக்கடியினால் பாதிக்கப் படுகின்றார்கள். பொதுவாக இவர்களுக்கு டயாலிஸ் செய்து சிறு நீரக செயலிழப்பின்றி காப்பாற்றப் படுகின்றனர்.

பாம்பு கடித்த இடத்தில் ஏற்பட்டுள்ள வீக்கத்தின் அழுத்தத்தை அளந்து அதற்கு ஏற்றாற்போல மருத்துவ சிகிச்சையினை மேற்கொண்டு சிறுநீரக செயலிழப்பினால் ஏற்படுகின்ற இறப்பு விகிதம் குறைக்கப்படுகிறது. அண்மையில் ஒரு குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் மகன் மூவரை யும்கரும்பு கட்டு தூக்குகின்ற போது பாம்பு கடித்து மூவரும் மத்துவமனையில் சிறுநீரகம் செயலிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்டனர். அம் மூவரும் காப்பாற்றப்பட்டனர்.

*விஷ வண்டு கடி*

பாம்புக்கடி ஒரு புறமிருக்க கதண்டு என்ற விஷ வண்டினால் கடிபட்டு சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடத்தக்கஅளவில் உள்ளனர். கதண்டு வண்டுகள் மாமரம், தென்னை, பனைமரங்களில் கூடுகட்டிவாழ்கின்றன. இவைகள் மாலை நேரத்தில் கூட்டுக்குள் சென்று கூட்டை மூடிவிடும். இந்த் கூட்டை தக்கமுன்னெச்சரிக்கையின்றி பாதுகாப்பின்றி கலைத்தால் அவ்வண்டுகள் எதிர்வரும் நபரைத் தாக்குகின்றன பல கதண்டுகள் ஒரே சமயத்தில் கடிக்கின்ற போது இரத்தத்தின் அழுத்தம் குறைந்து சிறுநீரகங்களின் செயல் தன்மை குறை யும்.

அந் நோயாளியினைப் பரிசோதிக்கும் போது, கதண்டுகள் கடித்த விஷயத்தினால் சதைகள் சிதைந்து சிறுநீரகங்கள் பழுதடைந்துள்ளதை உறுதிசெய்து விட முடியும். கதண்டு கடிக்கு உடனே வைத்தியம் செய்தால் சிறுநீரகத்தின் செயல் இழப்பினைத் தவிர்த்துப் பாதுகாக்கலாம்.

*லெப்டோஸ்பை ரோசிஸ்*

லெப்டோஸ்ரோசிஸ் நோய் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜனவரிவரை தென்னகத்தில் சாதாரண காய்ச்சலில் தொடங்கி மூளை திசுக்களைப் பாதித்து சிறுநீரகச் செயலிழப்பினை ஏற்படுத்தி மரணம் வரை கொண்டு செல்கின்ற நோயாகும்.

வீட்டில் வளர்க்கின்ற கால் நடைகள் மற்றும் வீட்டைச் சுற்றி வாழ்கின்ற எலி, பெருச்சாளி போன்றவை வெளியேற்றுகின்ற சிறுநீரின் வழியே இந்நோய்க் கிருமிகள் மழையினால் தேங்கிக் கிடைக்கின்ற நீர், சாக்கடைக் கழிவு நீரில் கலக்கின்றன. இந்த நீரில் நமது கால்கள் படுகின்ற போது காலில் உள்ள சின்ன சின்ன வெடிப்புகள், காயங்கள் மூலமாக நமது உடலில் புகுந்து குளிர்காய்ச்சல், மஞ்சள்காமாலை மற்றும் சிறுநீரகப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இதனை தக்க சமயத்தில் கண்டறிந்து மருத்துவர்களின் ஆலோசனையின்பேரில் சிகிச்சையினை மேற்கொண்டு இறப்பினைத் தவிர்க்கலாம்.

*பிரசவம், கருக்கலைப்பினால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு*

மருத்துவரின் ஆலோசனையின்றி அனுமதி இன்றி அனுபவ வைத்தியரினால் காட்டாமணக்குப் பால்போன்ற நச்சுப்பொருட்களால் செய்யப்படுகின்ற கருக்கலைப்புகள் சிறுநீரகச் செயலிழப்பு மட்டுமல்லாது உயிரிழப்பையே ஏற்படுத்தி விடுகின்றன. பிரசவ காலங்களில் ஏற்படுகின்ற இரத்தப் போக்கு, உயர் ரத்த அழுத்தம் அதிகமாகி குழந்தை கருப்பையிலேயே இறந்த நிலையில் சிறு நீரகங்கள் பாதிக்கப்படுகின்றன.

*வயிற்றுப்போக்கு வலி நிவாரணி*

சாதாரண வயிற்றுப் போக்கு தானே என்று நாம் அலட்சியமாக விட்டால் அது திடீர் சிறுநீரகச் செய



லிழப்பு பாதிப்பில் கொண்டு விடும் வயிற்றுப் போக்கு ஏற்பட்ட உடன் சர்க்கரை, உப்பு கலந்த திரவத்தை நிறைய பருகி உடலில்ஏற்படும்நீர்க் குறைவை சமன்செய்தல் வேண்டும். இல்லை என்றால் சிறு நீரகத்துக்கும் செல்லும் இரத்தம் குறைந்து சிறுநீரகம் செயலிழக்க வாய்ப்பேற்படும்.

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் வலி நிவாரணிகளின் விளம்பரங்கள் தான் தேவைப்படுகின்ற போது அளவுக்கதிகமாகவும், தேவையற்ற நேரங்களிலும்மாத்திரைகளைமருத்துவரின் அறிவுரையின்றியும் உட்கொள்வதனால் அவை ஒவ்வாமையினை ஏற்படுத்தி சிறுநீரகங்களைப் பாதித்து செயலிழக்கச் செய்கின்றனவேமருத்துவரின் பரிந்துரையின்றி தேவையில்லாமல்தாங்களாகவே வலி நிவாரண மருத்துகளைச் சாப்பிடுவது தவறு.

## இராசி பலன்

07.03.2006
(மாசி 23, செவ்வாய்க்கிழமை)
அட்டமி முன்னிரவு 7.24மணிவரை
ரோகினி முற்பகல் 9.00மணிவரை
இராகுகாலம் 3.25-4.55மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, பணக்குறைவு, காரிய தாமதம், வேலைச்சுமை. |
| இடபம் | ஆழ்ந்த சிந்தை, புதிய முயற்சி, உற வினா சந்திப்பு, உற்சாகம். |
| மிதுனம் | காரிய அலைச்சல், கௌரவக்குறைவு, பணவிரயம், ரோகநிலை. |
| கடகம் | உறவினர் வருகை, சுபநிகழ்வு, காரிய நன்மை, நல்ல வருமானம். |
| சிங்கம் | புதிய தகவல், அதிகாரம், நல்ல சம்பவம், உடல் நலம். |
| கன்னி | பித்தரோகம், கட்டுப்பாடு, காரியதாமதம், பிரயாணம். |
| துலாம் | வீண்பகை, காரிய தடங்கல், சிந்தனை மிகுதி, உடல்நலக்குறைவு. |
| விருச்சிகம் | குடும்பசுகம், போசனசுகம், காரிய சித்தி, நண்பர்கள் உதவி. |
| தனுசு | வாகனசுகம், சுபநிகழ்வு, முயற்சிகைகூடும், உற்சாகம். |
| மகரம் | தொழில் நன்மை, இடமாற்றம், பணக் குறைவு, மனச்சஞ்சலம். |
| கும்பம் | கற்பனை மிகுதி, திடீர் நன்மை, உஷ்ண நிலை, பிரயாண சுகம். |
| மீனம் | கூட்டு முயற்சி, போசனசுகம், சகோதரா உதவி, பிரயாணசுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## தேர்தல் சட்டவிதிகள் மீறப்படுகின்றன பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தேர்தல் சட்டங்கள் தொடர்ச்சியாக மீறப் பட்டுவருவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல் சட்டங்களை பெருமளவில் மீறி வருவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் சட்டங்களைமீறி செயல்படுவதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தும் பொருட்டு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தமது கட்சியினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை வரவேற்கத் தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-9)

## இரண்டாம் சுற்றுப் பேச்சுவரை வார்த்தை மோதல் வேண்டாம்

### வேண்டுகோள் விடுக்கிறது நோர்வே

ஜெனீவாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடங்கும் வரை சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்க நோர்வே முடிவு செய்துள்ளது.

பேச்சுவார்த்தைகளின் முடிவு குறித்து அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் கடுமையான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் தேவையற்ற முறுகல் ஏற்படலாம் என்பதால் வார்த்தைக்கணைதொடுப்பதனை தவிர்க்குமாறு நோர்வேஅறிவுறுத்தியுள்ளது.

ஜெனீவாவில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டினை அடுத்த இருமாதங்களில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நோர்வே இருதரப்பினரிடமும் வேண்டுகோள் விடுக்கவுள்ளது. (த)

## ஏகாதசி விரத பூஜை

(அளவெட்டி)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராணயர் தேவஸ்தானத்தில் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு, ஏகாதசி விரத பூசை நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்கு, வசந்த மண்டபபூஜையைத் தொடர்ந்து 10 மணிக்கு நாராயண சுவாமி திருவீதியுலா வருதலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7)

## ஜே.வி.பியினர் முதலில் தம்மை சுயவிமர்சனம் செய்யவேண்டும்

### - ராஜித சேனாரட்ண -

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏற்பட்ட இணக்கப்பாடு பற்றி தமக்குத் தெரியாது என்று ஜே.வி.பி.யினர் தெரிவிப்பது பொய்யான கருத்து என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸவும், பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸவும் ஜனாதிபதியுடன் அலரிமாளிகையில் கட்டுப்பாட்டு அறையில் இருந்து செய்மதி ஊடாகப் பேசிய பின்னரே இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளார்கள்.

இணக்கப்பாடு குறித்து தெரியாது என்று ஜே.வி.பி.யினர் தெரிவிப்பது உணவை உண்ட பின்னர் வயிற்றுக்கு சரியில்லை என்று கூறுவது போலாகுமென்று குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிகஹெல உறுமய ஜெனீவா பேச்சுக்களை விமர்சித்தமை காரணமாகவே அதனை தற்போது ஜே.வி.பி விமர்சித்து வருகின்றது.

ஜாதிகஹெல உறுமய சிங்கள இனவாத சக்திகளிடம் செல்வாக்குப் பெற்றுவிடும் என்ற அச்சத்தில் ஜே.வி.பி.யினர் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கின்றார்கள்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் முன்னர் ஜே.வி.பியினர் இந்த விடயத்தில் தம்மைப் பற்றி சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டுமெனவும் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். (த-9)

### நாட்டின் அபிவிருத்திக்கு

# பிராந்திய மட்டத்திலான நிர்வாகம் அவசியமானது

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் கூடிய பிராந்திய மட்டத்திலான நிர்வாகமொன்று அவசியமென்று பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான திணைக்களத்தின் விரிவுரையாளர் கலாநிதி நவரத்தின பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை அளிக்கும் வகையில் மாகாண பிராந்திய நிர்வாகம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

கிராமப் புறமக்களின் வாழ்க்கை முறைகளை இனம் காண்பதற்குச் சிவில் நிர்வாக முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி உள்ளூராட்சி மன்றங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அதிகாரம் பொதுமக்களின் சேமநலனுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக முக்கியமென்றும் வலியுறுத்தினார். (த-9)

## ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள்

### சர்வதேச சமூகத்தின் வரவேற்பைப் பெற்றுள்ளது

**டியூ.குணசேகர**

(கொழும்பு)

ஜெனீவாவில் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச சமூகத்தின் வரவேற்பைப் பெற்றுள்ளது என்று தேசிய ஒருமைப்பாட்டு அரசியல் விவகார அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம் பெரிதும் உதவியது என்றும் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நிலைமையை தெளிவாகப் புரிந்து கொண்ட பின்னர், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் இறங்கியுள்ளது தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அனைவருக்கும் சுதந்திரம் இருக்கின்ற போதிலும், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதையும், நாட்டின் இருப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துவது அனைவரினதும் பொறுப்பாகுமென்று தெரிவித்தார்.

பாரபட்சமான முறையில் நடந்துகொள்ளும் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் பேச்சுவார்த்தைகள் குறித்தும் நம்பிக்கையீனமான அபிப்பிராயங்கள் ஏற்படாத வண்ணம் செயற்படவேண்டுமென்றும் அமைச்சர் மேலும் கேட்டுக்கொண்டார். (த-9)

### பயிற்சிப் பாசறை

(யாழ்ப்பாணம்)

மதுவரித் திணைக்களத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மதுவரித் திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களுக்கான பயிற்சிப் பாசறை குருநாகலில் உள்ள மதுவரிப் பயிற்சிக் கல்லூரியில் 5 நாட்கள் நடாத்தப்படுகிறது.

நேற்றைய தினம் ஆரம்பமான இப் பயிற்சிப் பாசறை தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறும். (து-132, 133)

### வெற்றிடங்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள மதுவரித் திணைக்கள அலுவலகங்களில் 10 பரிசோதர்கள் பதவிக்கும், 15 பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கும் வெற்றிடம் உள்ளதாகத் தெரிகிறது.

இவ் வெற்றிடங்கள் எதிர்வரும் ஆனி மாதத்துக்கிடையில் நிரப்பப்படவேண்டுமெனவும், இவ்விதம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 3 மாத காலப் பயிற்சி வழங்கப்படுமெனவும் கூறப்படுகிறது. (து-132, 133)

## மின்திட்டத்திற்கென வழங்கிய நிதியில் சொகுசு வாகனம் வாங்கும் மின்சார சபை

(கொழும்பு)

தமிழர் பகுதியில் மின் திட்டம் ஒன்றுக்கு ஜப்பானிய அரசாங்கம் வழங்கிய நிதியில் சொகுசு வாகனம் ஒன்றை இலங்கை மின்சாரசபை வாங்க முடிவு செய்துள்ளது.

கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையே மின்பகிர்மான கம்பிகளை அமைப்பதற்காக 16 மில்லியன் அமெரிக்க டொலரை ஜப்பானிய அரசு வழங்கியிருந்தது.

கிளிநொச்சியில் துணை மின் நிலையம் அமைத்து அதனூடே இந்த மின்பகிர்மான கம்பிகளை அமைப்பதற்காக இந்த நிதி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வாகனத்தை ரூ 6 மில்லியனில் வாங்கி விட முடியும் என்ற நிலை இருந்தும் ரூ 12 மில்லியன் மதிப்பில் சொகுசு வாகனம் ஒன்றை வாங்க இலங்கை மின்சார சபை ஒப்பந்தங்கள் கோரியுள்ளன.

நீண்ட தூரத்துக்குச் சென்று இம் மின் திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், சொகுசு வாகனம் தங்களுக்குத் தேவையானதே என்றும் இலங்கை மின்சார சபையினர் வாதிடுகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக கிராம அபிவிருத்தித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதே போல் மொன்டிரோ சொகுசு வாகனங்களை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## வேறுபடும் கட்டண அறவீடுகள்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ் வண்டிகளில் பொதிகளுக்கான கட்டணங்கள் வாகனத்திற்கு வாகனம் வேறுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மினி பஸ்களில் பயணிகள் தாம் கொண்டு செல்லும் பொதிகளுக்குக் கட்டணங்கள் வழங்கும்போது, சில பஸ்களில் குறைந்த கட்டணங்களையும், சில பஸ்களில் கூடிய கட்டணங்களும் செலுத்த வேண்டிருப்பதால், மினிபஸ் நடத்துனர்களுக்கும், பயணிகளுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மினிபஸ் வண்டிகள் பயணிகளுக்கான கட்டணத்தைச் சமமாக அறவிடும் அதே நேரத்தில் பொதிகளுக்கு அறவிடும் கட்டணங்கள் வேறுபட்டிருப்பதனால் இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த-7)

## சுவிஸ் அரசின் நடவடிக்கை அவமரியாதையைத் தந்துள்ளது

### அரசுகுழு அதிருப்தி

ஜெனீவா பேச்சுக்களின்போது, தமது பேச்சுக் குழுவினர் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பேச்சு நடைபெற்ற அரண்மனைக்குள் அனுமதிக்கப்பட்டமை தமக்கு அவமரியாதையை ஏற்படுத்தியுள்ளதாக அரசு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அமைச்சர்கள் உட்பட அரச தரப்பு பிரதிநிதிகள் அனைவரும், உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரேயே பேச்சுக்கள் நடைபெற்ற அரண்மனைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இச்செயலானது, ஒரு இறைமையுள்ள அரச அமைச்சர்களை அவமரியாதைக்கு உட்படுத்தியுள்ளதாகவும், இந்த விடயம் சுவிஸ் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### அடையாள அட்டைகள் விநியோகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு, அப்பகுதியில் இருந்து விண்ணப்பித்தோருக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை அந்தந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக விநியோகிக்கப்படுவதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-108)

## இரு நீதிபதிகளின் பதவி விலகல் குறித்து விளக்கம் கோரும் சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

நீதித்துறை ஆணைக் குழுவின் இரு நீதிபதிகள் திடீரென பதவி விலகியமை தொடர்பாக அரசாங்கத்திடம் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் நிறுவனம் விளக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், தலைமை நீதிபதி உள்ளிட்டோருக்கு அந்த நிறுவனத்தின் சட்டத்தரணி பிலிப் தமின்டிஜிஸ் எழுதியுள்ள கடிதத்தில்,

நீதித்துறை ஆணைக்குழு விவகாரத்தினால் இலங்கை சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கவலை ஏற்பட்டுள்ளது. நீதிபதிகள் நியமனம், இடமாற்றம் ஆகியவற்றை ஆணைக் குழுவே மேற்கொண்டு வந்தது.

இந்த நிலையில் அந்த ஆணைக்குழுவின் இரு நீதிபதிகள் திடீரென பதவி விலகியுள்ளனர். இது தொடர்பில் உரிய விளக்கம் அளிக்க கோருகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதம் அனுப்பியுள்ள சர்வதேச சட்டத்தரணிகள் சங்கமானது, 183 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட சர்வதேச அளவிலான மிகப்பெரிய சங்கமாகும்.

1995ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலாவை கௌரவத் தலைவராகக் கொண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. சட்டத்தரணிகளின் சுதந்திரமான செயற்பாடு, சட்டத்தின் ஆட்சியை செயற்படுத்துதல் ஆகிய விடயங்களில் இந்த அமைப்பு கவனம் செலுத்திவருகிறது.

அதேபோல் மக்கள் உரிமை இயக்கம் என்ற அமைப்பும் நீதிபதிகள் பதவி விலகல் குறித்துத் தமது கவலையை வெளியிட்டுள்ளது. (த)

## இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறுமா எனச் சந்தேகம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

முதலாம் கட்டப் பேச்சுக்கள் முடிவுற்ற பின் பங்காளிக் கட்சிகளின் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் அரசாங்கம், அடுத்த கட்டப் பேச்சை ஆசிய நாடொன்றில் நடத்துவதற்கு முயற்சித்தது.

எனினும் இரண்டு தரப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கூட்டறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் அதில் மாற்றம் செய்ய முடியாது என்று நோர்வே தரப்பு உள்ளிட்ட தரப்புக்கள் தெரிவித்தன.

ஆனால் தற்போது இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சில் யுத்த நிறுத்த உடன்பாட்டு அமூலாக்கம் பற்றிய பேச்சை தவிர்த்து, மனிதவுரிமைகள் சம்பந்தமாகப் பேச அரசாங்கம் புதிய நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, முதற்கட்ட ஜெனீவாப் பேச்சுக்களின் பின் கிழக்கில் இடம்பெற்றுள்ள தாக்குதல்களும் விடுதலைப்புலிகளை ஆத்திரமூட்டியிருப்பதினால் இரண்டாம் கட்டப் பேச்சுக் குறித்த சந்தேகங்கள் பலரிடமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## தையல் மனையியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சி இன்றும் நாளையும், காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் கைதடிச் சந்தியில் அமைந்துள்ள பொது மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும் சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி, சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர் ய.பரந்தாமன், சாவகச்சேரி நிதி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர் ஜே.கில்பேட் குணம், சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-9)

### மென்பந்து துடுப்பாட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி இன்றும், நாளையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணி முதல் இடம்பெறவுள்ள இப் போட்டியில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய கல்விக் கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற முதல் 3 இடங்களையும் பெற்ற அணிகள் பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7)

# இன்று ஒரு தகவல்

## சோக்ரடீஸ்

"கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு!" என்று ஒரு பெரியவர் அறிவுரை கூறினார்.

அதைக் கேட்ட ஒரு சிறிய பையன், "அது எப்படி பெரியவரே புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கருங்கல்லில் கத்தியைத் தேய்க்கலாம்! புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டுபோய் தரையிலே தேய்த்துக் கொண்டிருக்கமுடியுமா?" என்று கேட்டான்.

உடனே பெரியவர்,"இந்தப் பையனுக்குப் புத்திக் கூர்மை குறைவு" என்று புரிந்துகொண்டார்.

அது சரி!

அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி!

இதே கேள்வியை ஒரு சமயம் சோக்ரடீஸிடம் அவருடைய சீடன் ஒருவன் "அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டான்.

சோக்ரடீஸ் நிமிர்ந்து அந்த சீடனைப் பார்த்தார். அதன் பிறகு சொன்னார்.

"இதற்கு நான் பதில் சொல்கிறேன்... ஆனால் அதற்கும் முன்னால் நீ ஒரு காரியம் செய்யவேண்டும்!" என்றார்.

"என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்!" என்றான் சீடன்.

"அதோ, அங்கே ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருக்கிறார் பார்! நேராக அவரிடம் போ! 'இங்கேயிருந்து பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் ஆகும்?' என்று அவரிடம் கேட்டு வா!" என்றார் சோக்ரடீஸ்.

'சரி' என்று சொல்லிவிட்டு சீடன் சென்றான்.

அந்தப் பெரியவரிடம் சென்ற அவன் பெரியவரே! இங்கேயிருந்து பக்கத்தில் இருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை! இந்த சீடன் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டான். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லை! உடனே இவன் ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது "சரி! பெரியவர் ஒரு மாதிரியாகத் தெரிகிறார்! புத்தி சுவாதீனம் இல்லாதவர் போல் இருக்கிறது!" என்று நினைத்துக்கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான்.

இவன் சிறிது தூரம் வந்தவுடனே அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டு,"நீ இங்கேயிருந்து பக்த்து கிராமத்திற்குப் போய்ச் சேர ஐந்து நிமிடம் ஆகும்!" என்றார்.

இப்போது சீடன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். பிறகு யோசித்தான். பிறகு அவரிடமே கேட்டுவிட்டான்! "பெரிய வரே! இந்தப் பதிலை நீங்கள் அப்போதே சொல்லியிருக்கலாம் அல்லவா? என்னைத் திரும்பிப்போகவிட்டு... அப்புறம் கூப்பிட்டு... அதற்குப் பிறகு இப்படி சொல்கிறீர்களே!" என்றான்.

பெரியவர் சிரித்தார். பிறகு சொன்னார்.

"ஏனப்பா! நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் நான் எப்படி நீ கிராமத்திற்குப் போய்ச்சேர ஆகக்கூடிய நேரத்தைச் சொல்ல முடியும்...? அதனால்தான் உன்னை நடக்க விட்டு...வேகத்தைப் பார்த்து அதன்பிறகு நேரத்தைச் சொன்னேன்!" என்றார்.

அதற்கு சீடனால் பதில் எதுவும் சொல்ல முடிய வில்லை... திரும்பி சோக்ரடீஸிடம் வந்தான்... நடந்ததைச் சொன்னான். "அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்!" என்றார் சோக்ரடீஸ்.

இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வர வேண்டும் என்பதற்காகத்தான்.. "கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு!" என்று பெரியோர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பொறுமையின் எல்லையில் புலிகள்

## -சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கொழும்பு)

வரலாற்றில் என்றும் இல்லாத பொறுமையைத் தமிழீழத் தேசியத் தலைவர் காட்டிவருகின்றார். அதன் விளைவை மிக விரைவில் சந்திக்க வேண்டிவரும் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் ஒலி வானொலிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பொறுமையின் எல்லைக்கே வந்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் மக்கள் பொறுமை இழந்து படையினர் மீது தாக்குதல் நடத்தியதை பார்க்க முடிந்தது.

இந்த நிலையில் நோர்வேயின் அனுசரணையுடன் சர்வதேச சமூகம் ஒரு இறுதி முயற்சியாக போர் நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இரு தரப்பையும் சந்தித்துப் பேசும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க சர்வதேச சமூகத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நல் எண்ணத்தையும் நிலைப்பாட்டையும் தெளிவாக்கும் நோக்கத்துடனேயே சந்திப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தோம்.

குறிப்பாக போர் நிறுத்த உடன்பாடு அமுலாக்கம் தொடர்பாகப் பேசுவதற்குத்தான் இனக்கம் தெரிவித்திருந்தோம். போர்நிறுத்த அமுலாக்கம் என்பது வன்முறைகள், ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் எல்லாவற்றையும் நீக்கி எமது மக்களுக்கு இயல்பு நிலையைக் கொடுப்பது என்ற அடிப்படையில்தான் கொண்டுவரப்பட்டது. இதுபற்றி ஒரு உத்தரவாதம் எமக்கு சர்வதேச சமூகத்தாலும் தரப்பட்டதால்தான் நாங்கள் இந்தப் பேச்சுக்களுக்கு வந்தோம்.

எமது பொறுமையின் எல்லையில் ஒரு இறுதி முயற்சியாகவே இந்தப் பேச்சு முயற்சியை எடுத்துள்ளோம். பொறுமைக்கும் எல்லை உண்டு.

இந்தப் பேச்சுக்கள் எமது பொறுமைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் நிலையை உருவாக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

படைத்தரப்பின் தற்போதைய போக்கினால் எமது தலைமைப்பீடமும் எமது விடுதலை அமைப்பும் ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கும் என்றே கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுமையை பல வீனமாகக்கருதிபடைத்தரப்பும், அரசாங்கமும் போருக்கான செயற்பாடுகளை மேற்கொண்டால் பொறுமை முடிவுக்கு வந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விளையாட்டுத்துறை அமைச்சின் ஆட்கடத்தல் தொழில் அமெரிக்க போலி விசா விவகாரத்தில் அம்பலமானது

(கொழும்பு)

போலி விசா மூலம் அமெரிக்கா செல்ல முயன்றதாக 8 பேர் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறையின் பாரிய ஆட்கடத்தல் மோசடி அம்பலமாகியுள்ளது.

போலி விசா மூலம் அமெரிக்காவின் அலாஸ்காவிலிருந்து வேலைக்குச் செல்ல முயன்றதாக 8 இலங்கையரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் கைது செய்தனர்.

சிங்கப்பூர் விமானம் மூலம் தாய்வானின் தைபேவுக்குச் சென்று அங்கிருந்து அலாஸ்காவுக்கு 8 பேரும் செல்லத்திட்டமிட்டிருந்தனர். இவர்கள் 8பேரையும்போலி விசா மூலம் அனுப்பியதாக விமான நிலையத்துக்கு வெளியே இருந்த 2பேரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அந்த 2 நபர்களும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் நெருங்கிய ஆதரவாளர்கள் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் தெரியவந்தது. இந்தப் போலி விசா மூலம் ஆட்கடத்தும் தொழிலில் செல்வாக்கான தொழிலதிபர் ஒருவருக்கும் பங்கிருப்பதாக விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் கைது செய்யப்பட்ட இருவரும் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவினால் தேசிய இளைஞர் சேவை சபையின் இயக்குநர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். போலி விசா மூலம் ஆட்கடத்தும் தொழிலுக்கு அமைச்சக வளாகத்திலேயே இருவரும் நேர்காணல் நடத்தியுள்ளதும் தெரிய வந்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தடுத்து வைத்துள்ள 8 பேரும் ஜீவன் குமாரதுங்கவின் ஆதரவாளர்களிடம் ரூ.7 இலட்சம் முதல் 9 இலட்சம் வரை பணம் அளித்துள்ளனர். இந்தப் பணப் பரிமாற்றமும் அமைச்சக வளாகத்திலேயே நடந்துள்ளது. இந்தப் பணப் பரிமாற்றம் தொடர்பான ஆதாரங்களை தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர்.

போலி விசாக்கள் மூலம் இதுவரை 79 பேரை அந்த இரு நபர்களும் வெளிநாடுகளுக்கு அனுப்பியிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆட்கடத்தல் தொழிலின் மூளையாகச் செயற்பட்ட தொழிலதிபர் தற்போது தலைமறைவாகி விட்டார். இந்தத் தொழிலின் மூலம் பல கோடிகளை அவர் சம்பாதித்திருப்பதும், அதன் மூலம் கொழும்பில் பிரதான வர்த்தகச் செயற்பாடுள்ள இடத்தில் பாரிய அடுக்குமாடிக் குடியிருப்பை விலைக்கு வாங்கியிருப்பதும் தங்கள் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

இந்த மோசடித் தொழில் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சின் செயலாளர் எஸ்.விர்த முல்ல, இரு இயக்குநர்களும் அமைச்சகத்தால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் என்றும் அவர்கள் அமைச்சக வளாகத்தைப் பயன்படுத்தியமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். அவரது வாக்குமூலத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துள்ளனர். மேலும் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் தனிச் செயலாளர் சமன் அமரசிங்கவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தற்போது வெளிநாட்டில் உள்ளார்.

போலி விசாக்கள் அனைத்தும் திட்டமிட்டு எளிதில் கண்டுபிடிக்காத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இவை தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய குற்றப்பலனாய்வுப் பிரிவினர் ஏலவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் 79 இலங்கையர் தொடர்பான விவரங்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (இ)

# நுரைச்சோலை மின் நிலைய நிர்மாணப்பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய நுரைச்சோலை மின் நிலைய நிர்மாணப்பணிகள் எதிர்வரும் 30 திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவிருப்பதாக இலங்கை மின்சார சபை தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்படவுள்ளது.

சீன, அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத் திட்டம் அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களினதும் கத்தோலிக்க தேவாலயத்தினதும் எதிர்ப்புக் காரணமாகவும் காலதாமதம் ஆகியிருந்தது.

இலங்கை மின்சாரசபை அடிக்கல் நாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

நுரைச்சோலை மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டால் ஏற்படவிருக்கும் நன்மை குறித்து மக்களுக்குபுரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு செல்லவிருந்த மின்சாரசபையைச் சேர்ந்த குழுவொன்று இறுதி நேரத்தில் தமது விஜயத்தை இரத்துச் செய்துள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமவாசிகள் இந்தக் குழுவிற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டதையடுத்தே இந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-9)

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற 90 வீதமானோரின் வாழ்க்கை நிலை இன்னும் மோசமான நிலையிலேயே!

இந்து சமுத்திர நாடுகளில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 90 வீதமானோரின் வாழ்நிலை மிகவும் மோசமாகவே உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் உறுப்பினர் மிலுன் கோதாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை, தாய்லாந்து, மாலைதீவு, இந்தோனேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் அக்சன் எய்ட் என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 5 நாடுகளின் 95 கிராமங்களில் வசிக்கும் 5 இலட்சம் பேரிடம் இது தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டு கடந்த டிசம்பரில் அக்சன் எய்ட் அமைப்பு அறிக்கை வெளியிட்டது.

பொதுவில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளற்றே இந்த மக்கள் இன்னமும் வாழ்ந்து வருகின்றனர் என்று அந்த அறிக்கை தெரிவித்தது. இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவுடன் இணைந்து செயற்பட அக்சன் எய்ட் முடிவு செய்தது. இதன் ஒரு பகுதியாக ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் உறுப்பினர் மிலுன் கோதாரி இலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் நிலைமைகள் குறித்து விசாரணை நடத்தவுள்ளார்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சூழல், அவர்களுக்குத் தேவையான உதவிகள் ஆகியவை ஆய்வு செய்யப்படவுள்ளன.

இனம், பால், மொழி, தேசிய இனவேறுபாடுகளின்றி அனைவருக்கும் உதவிகள் சென்றடைய வேண்டியது அவசியம் என்றும் மிலுன் கோதாரி தெரிவித்தார். (இ)

# புத்த பெருமானின் நினைவு தினம்

(கொழும்பு)

புத்த பெருமானின் 2550 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று சமய விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அங்குரார்ப்பண வைபவம் மே மாதம் 15ஆம் திகதி கோத்தாரமா அரங்கில் கலாசார கல்வியமைச்சுக்களின் ஆதரவுடன் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுமென்று அவர் தெரிவித்தார். இதனை முன்னிட்டு மே மாதம் 17, 18ஆம் திகதி களில் விசேட மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளது. (த-9)

# பேச்சுவார்த்தைக்குஇரகசிய பிரதிநிதிகள்

## சுவிஸ் சென்றதாகக் கசியும் தகவல்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுக்களின் பின் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைக்கு ஜே.வி.பி.யும், ஹெல உறுமயவும் பெரும் எதிர்ப்புகளை தெரிவித்துவரும் நிலையில் கூட்டறிக்கையை இறுதியில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை முடுக்கிவிட்டிருந்தவர் ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ என்ற விடயம் இப்பொழுது தெரிய வந்திருக்கிறது.

பஸில் ராஜபக்ஷ சிங்கப்பூர் ஊடாக ஜெனீவா சென்று பேச்சுக்கள் நடைபெற்ற சட்டு டிபொஸி மண்டபத்திற்கு அண்மையிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்தாரென்றும், இவரது வருகை பற்றி அமைச்சர்கள் நிமால் சிறி பாலடி சில்வாவும், ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளேயும் மட்டுமே அறிந்திருந்தனரென்றும் தெரிய வந்துள்ளது. இவரது வருகையின் நோக்கம் எரிக்சொல்ஹேய்ம் ஊடாக விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குழு தலைவர் பாலசிங்கத்துடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்துவதற்கேயென செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டம் நாள் பேச்சுக்களின் முடிவில் கூட்டு அறிக்கை வெளியிடுவதில் சிக் கல்கள் தோன்றிய சமயமே பஸில் ராஜபக்ஷ தனது பிரசன்னத்தை வெளிக்காட்ட வேண்டி யேற்பட்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டறிக்கையில் 'ஒப்பந்தம்' என்ற சொல்லை ஏற்றுக்கொள்ள முடியாதென்று நிமால் சிறி பாலடி சில்வா இறுதிவரை வாதிட்டதால் கூட்டறிக்கை வெளி யிடமுடியாத நிலை தோன்றிய தென்றும் (போர்நிறுத்த) ஒப்பந்தம் என்ற சொல் ஜே.வி.பி.யினராலும் ஹெல உறுமயவினராலும் எதிர்க்கப்படுவதால் அதில் ஒப்பமிட முடியாதென பிடிவாதம் பிடித்த வேளை எரிக்சொல்ஹேய்ம்பஸில் ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்ட பின்னரே அவர் அங்கு தோன்றி 'வருவனவற்றை நான் பார்த்துக் கொள்கின்றேன் நீங்கள் ஒப்பமிடுங்கள்' என்று தீர்மானமாக கூறினாரென்றும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், தாம் இதற்கு உடன்படமுடியாதென்று இப்பொழுது ஹெல உறுமய தெரிவித்துவிட்டது. இதேவேளை தமது வருகையைப் பகிரங்கப்படுத்தாமல் அரசின் சார்பில் மேலும் ஒருவர் ஜெனீவா சென்றிருந்தாரென்றும், இவர் சுவிற்சர்லாந்தில் புலிகளுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கை யொன்றை ஏற்பாடுசெய்வதற்காகவும், அரச குழுவினரின் நடத்தைப் போக்கினை கண்காணிப்பதற்காகவும் அனுப்பப்பட்டிருந்தாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. சச்சின் வாஸ் குணவர்த்தன என்ற இந்த நபர் ஜனாதிபதிக்கு நெருக்கமான ஆலோசகர் பேச்சுக்கள் நடைபெற்றவேளையில் அரசபிரதிநிதிகள் வரிசையில் கடைசியாக இருக் கக்காணப்பட்டதாகவும், விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இவர் பற்றிய தகவல் கோரப்பட்டபோது, அவர் கண்காணிப்பு நடவடிக்கைகளை கவனிப்பதற்காகவிசேடமாகஅனுப்பப்பட்டிருந்ததாக நிமல் சிறிபாலடி சில்வா பதிலளித்தா ரென்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. (து-6)

## 2 கோடி ரூபா செலவில் வீதி புனரமைப்பு

(மருதங்கேணி)

கடந்த 25வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் சேதமடைந்த இன்பருட்டி சக்கோட்டை வீதி நவீன முறையில் 2 கோடி 75 ரூபா செலவில் திட்டச்சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் அனுசரணையுடன் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மைல் நீளமான இவ் வீதியை அமைப்பதற்கு வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணி உரிமையாளர்களை வீதி விஸ்தரிப்பு கருதி தேவையான காணியை தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

குடியிருப்புகளுக்கு ஊடாக கடற்கரை வீதியை இணைக்கும் இவ் வீதி போர்க்காலச் சூழலில் கரையோர மக்கள் போக்குவரத்துக்கு பெரும் உதவியாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(கு-35)

## நிர்வாக சேவையில் உள்ள ஊழியர்களுக்குப் பாராட்டு

நிர்வாக சேவையில் உள்ள ஊழியர்கள் தொடக்கம் கிராம உத்தியோகத்தர்கள்வரை அனைத்து உத்தியோகத்தர்களினதும் சேவைகள் பாராட்டைப்பெற்றுள்ளன.

இதற்கமைய கஷ்ரப் பிரதேசங்களிலும், காரியாலயங்களிலும் திறமையாகவும் ஒழுக்கமுடனும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சில ஊழியர்களின் தவறினால் அரச துறையில் சில உத்தியோகத்தர்கள் குறைத்து மதிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் இருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சந்திர சிறி கயதீர தெரிவித்தார்.

சுனாமி போன்ற இடர்காப்பின் போது அரச உத்தியோகத்தர்கள் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளனர். இதனால் அரச நிர்வாகப் பிரிவில் அவ்வாறான ஊழியர்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-7)

## வடமராட்சி கல்வி வலயத்தில்

## வலயக் கணனிவள நிலையங்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள்

(துன்னாலை)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள வலய கணனி வளநிலையத்தில் நிலைய முகாமையாளர் பதவிக்கு இரண்டு நிலைய விரிவுரையாளர் பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிலைய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் அதிபர் சேவை அல்லது ஆசிரியர் சேவை 2:1 அல்லது அதற்குக் கூடிய சேவைத்தரம் உடையவராகவும், கணனித்துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் 6 மாதத்திற்குக் குறையாத பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவராகவும், க.பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சி தரத்துடன் ஆங்கில மொழியில் சித்தியடைந்தோர் அல்லது ஆங்கிலமொழி மூலத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் இச் சேவையில் குறைந்தது 5 வருடகாலம் இடமாற்றம் கோராது சேவையாற்றக்கூடியவராகவும் வேலை நேரத்திற்குப் புறம்பாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

நிலைய விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் அரச பாடசாலையில் 2 வருடத்திற்கு குறையாத சேவைக்காலத்தைக் கொண்டிருப்பதுடன் கணனி விஞ்ஞானப் பட்டம் பெற்றவராக அல்லது பட்டத்தில் ஒரு பிரதான பாடமாக கணனி விஞ்ஞானம் கற்றிருந்தல் அல்லது பல்கலைக்கழகப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு குறையாமல் கணனிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் கணனி மொழிகளில் தேர்ச்சியுடன் நிகழ்ச்சித் திட்டங்கள் எழுதும் ஆற்றலும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ. த.சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சி தரத்துடன் ஆங்கிலமொழியில் சித்திபெற்றிருத்தல் அல்லது க.பொ.த.சாதாரண தரத்தில் ஆங்கில இலக்கியத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலத்தில் பட்டம்பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் இச் சேவையில் இணைந்த பின்னர் குறைந்தது 5 வருடகாலம் இடமாற்றக் கோராது சேவையாற்றக்கூடியவராகவும் வேலை நேரத்திற்குப் புறம்பாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து 20.03.2006இற்கு முன்னதாக வடமாரட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேற்படி இரு பதவிகளுக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக் கப்படுவர். (து-101)

## வனவள கட்டளைச்சட்டம் மறுசீரமைக்கப்பட்டது

(கொழும்பு)

தாவரவியல் மற்றும் வனவள கட்டளைச் சட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. புதிய மறுசீரமைப்புக்கமைய சரணாலயப் பிரதேசங்கள், பூங்காங்களுக்குள் மிருகங்களை வேட்டையாடுவது அந்தப் பிரதேசங்களிலுள்ள மரங்களை வெட்டுதல் தொடர்பில் விதிக்கப்படும் தண்டனை அதிகரிக்கப்பட்டிருப்பதாக வனவளப் பணிப்பாளர் நாயகம் தயானந்த காரியவசம் தெரிவித்துள்ளார்.

தற்போது காட்டுயானைகளைக் கொல்பவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பிணை விடுதலை இந்தப் புதிய மறுசீரமைப்பின் கீழ் நீக்கப்பட்டிருக்கிறது.

யானைகளுக்காக புதிய சரணாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. 1993ஆம் ஆண்டின் பின்னர் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மறுசீரமைப்பானது இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆலோசனைகள் ஆராயப்பட்டு, தயாரிக்கப்பட்டதாகு மென்றும் அவர் கூறினார்.

தற்போது நீதிபதிகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த மறுசீரமைப்புச் சட்ட மூலம் அடுத்த மாதம் வனவள அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் பாராளு மன்றத்தில் சமப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(கு-7)

## நல்ல சமுதாயத்தை உருவாக்க கல்வியமைச்சின் ஊடாக வேலைத்திட்டம்

(கொழும்பு)

நல்ல பழக்க வழக்கங்கள் நிறைந்த இளம் சமு தாயமொன்றை உருவாக்கும் வேலைத்திட்டத்தை கல்வியமைச்சின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தசாப்தங்களாக சிறுவர்கள் நல்ல பழக்கவழக் கங்களை கடைப்பிடிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். மாருவெலப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கல்வியமைச்சின் ஊடாக நல்ல பழக்கவழக்கங்கள் உள்ள சிறுவர்களைஉருவாக்கும்வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தியிருக்கின்றோம்.

கடந்த தசாப்தங்களை நோக்கும் போது இன்றைய சிறுவர்கள் கெட்ட பழக்கங்கள் அற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

குறிப்பாக இன்று மாட்டிறைச்சி வகைகளைச் சாப்பிடாத சிறுவர்களைக்காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையை எதிர்கால சந்ததியினருக்கும் உருவாக்கவே எண்ணியிருக்கிறோம் என்றும் தெரிவித்தார். (கு-9)

## மின்கம்பங்களால் ஏற்படும் மரணங்களைத் தவிர்ப்பதற்குப் புதிய வழிமுறைகள்

மின்சாரக் கம்பங்கள் உடைந்து வீழ்வதினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் மின்சாரக் கம்பிகளினால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்கு புதிய வழிமுறைகள் கையாளப்படவுள்ளன.

இதன் கீழ், நீண்ட காலத்திட்டத்தின் ஓர் அங்கமாக 15வருடத்திற்கு மேல் நீடிக்கக்கூடிய 20 ஆயிரம் மின்கம்பங்களை அரச மரக் கூட்டுத்தானத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு மின்சார சபை தீர்மானித்திருக்கிறது.

அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ணவின் ஆலோசனைக்கமைய இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதேவேளைகேள்விக்கு இணைவான சேவையை வழங்கும் போது, உரிய தரத்திற்கமைய மின்சாரக் கம்பங்களைவழங்குவதில், இலங்கை மின் சாரசபை பெரும் சிக்கல்களை எதிர்நோக்கிவருகிறது.

இவ்வாறு பின்தங்கிய கிராமப் புறங்களுக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும்போது, தரம் குறைந்த மின்கம்பங்கள் உபயோகிக்கப்படுவதால், மின் கம்பிகளுக்கு சேதமேற்படும் வாய்ப்புகள் அதிகமாகின்றன.

எதிர்வரும் காலங்களில் கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதியை வழங்கும்போது புதிய மின்கம்பங்கள் பயன்படுத்தப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (கு-7)

## மாவட்ட முகாமையாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது

நாடளாவிய ரீதியில் இலங்கை வங்கிச் சேவையில் முகாமையாளர் தரத்தில்இருந்த56பேருக்கு மாவட்ட முகாமையாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

வடபிராந்தியத்தைச் சேர்ந்த கே.உலகநாதன், ஆர்.வியஜசிங்கம், ஆர்.சிவராமலிங்கம், எஸ்.சிவநாதன், மன்னார் பிராந்தியத்தை சேர்ந்த மைக்கல் மரியநாயகம்ஆகியோரும் பதவி உயர்வு பெற்றவர்களில் உள்ளடங்குவர்.(து-132, 133)




சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற சிவராத்திரிவிழா நிகழ்வில் இந்து கலாசார அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா உரையாற்றுவதைக் காணலாம். (படம்:- எஸ்.ரி.ராஜா, திலீவின்பன்)

# காது கேட்காத, வாய்பேசாத குழந்தைக்கு மறுவாழ்வு



பிறக்கும் போதே காது கேட்காத, வாய் பேச முடியாத குழந்தைக்கு இருதயமும் தலை கீழாக இருந்ததால், பெற்றோர் அனாதை ஆசிரமத்தில் தூக்கி வீசி விட்டனர். இந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு இங்கிலாந்திலிருந்து கிடைத்த நன்கொடை மற்றும் உள்ளூரில் திரட்டப்பட்ட நன்கொடையுடன் 'காக்ளியர் இம்ப்ளான்ட்' சிகிச்சை செய்யப்படவுள்ளது.

அனாதை ஆசிரமத்தில் 'கேத்ரீனா மெர்சி' என்று பெயர் சூட்டப்பட்ட இந்தக் குழந்தையின் சோகக் கதை வருமாறு.

வாய் பேச முடியாமலும், கேட்கும் திறன் இல்லாமலும் பிறந்த தன் காரணமாக ஒன்பது மாதக் குழந்தையாக இருந்த போது இந்தப் பிஞ்சுக் குழந்தையை கிறிஸ்தவ மிஷன் அறக்கட்டளையில் விட்டு விட்டு காணாமல் போய் விட்டனர் இந்தக்குழந்தையின் பெற்றோர். அங்கே இந்தக் குழந்தைக்கு 'கேத்ரீனா மெர்சி' என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னர் ஒரு தம்பதியர் இந்தக் குழந்தையை 'தத்து' எடுத்து வளர்க்கின்றனர். இருப்பினும் இந்தக் குழந்தை கிறிஸ்தவ மிஷன் அறக்கட்டளை தலைவர் டாக்டர் கோலின் ரெடிட்டின் கண்காணிப்பில் தான் வளர்கிறது.

பிறக்கும் போதே இவ்வளவு பிரச்சினைகளுடன் பிறந்த இந்தக் குழந்தைக்கு எந்த சிகிச்சை அளித்தாலும் அதற்கு லட்சம் லட்சமாகப் பணம் தேவைப்படும்.

குறிப்பாக காது கேட்கும் திறன் இல்லாமலும் வாய் பேச முடியாமலும் இருக்கும் இந்தக் குழந்தைக்கு வெளிநாடுகளில் செய்யப்படுவது போன்று 'காக்ளியர் இம்ப்ளான்ட்' சிகிச்சை செய்தால் அதற்கு குறைந்த பட்சம் ஐந்து லட்சம் ரூபாய் முதல் அதிக பட்சம் . ஒன்பது லட்சம் ரூபாய் வரை செலவாகும்.

நிராதரவாகத் தவிக்கும் இந்தக் குழந்தைக்கு யார் வைத்தியம் செய்வார்கள் என்ற கேள்வி எழுந்த போது அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் கோலின் ரெடிட் நன்கொடை திரட்டத் தொடங்கினார்.

அதன்படி இங்கிலாந்து நாட்டிலிருந்து கிடைத்த நன்கொடை மற்றும் உள்ளூரில் கிடைத்த நன் கொடையுடன் இந்தக் குழந்தை காக்ளியர் இம்ப்ளான்ட் சிகிச்சைக்குத் தயாராகிவிட்டது.

இந்தக் குழந்தைக்கு 'காக்ளியர் இம்ப்ளான்ட்' சிகிச்சை செய்யவுள்ள கே.கே.ஆர் மருத்துவமனை டாக்டர்கள் ராமலிங்கம் மற்றும் ரவி ராமலிங்கம் ஆகியோர் கூறுகையில்,

பிறவியிலேயே காது கேட்கும் திறன் இல்லாமலும், வாய் பேச முடியாமலும் உள்ள குழந்தைக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமெனில்காது, மூக்கு, தொண்டை, மருத்துவர் குழந்தைகள் நல மருத்துவர், காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோருக்கு பாடம் நடத்தும் ஆசிரியர் ஆகியோர் அடங்கிய ஒரு குழு தேவை. அந்தக் குழுவை நாங்கள் தயார் செய்து விட்டோம். இந்தக் குழந்தைக்கு நான்கு வயது தான் ஆகிறது என்பதால் 'காக்ளியர் இம்ப்ளானட்' சிகிச்சையை செய்யலாம். அதற்கு முன்னதாக இந்தக் குழந்தைக்கு டான்சில் அறுவைச்சிகிச்சை செய்யவுள்ளோம் அது வெற்றிகரமாக முடிந்த பிறகு இந்தக் குழந்தைக்கு 'காக்ளியர் இம்ப்ளான்ட்' சிகிச்சை செய்யப்படும்.

காதில் நிரந்தரமாக இந்த 'இம்ளான்ட்' கருவி பொருத்தப்படும் அவ்வப்போது அதை எடுத்து 'ரீசார்ஜ்' செய்ய வேண்டும். இந்த சிகிச்சை மேற்கொண்ட பிறகு கேத்ரீனா மெர்சி பிற குழந்தைகளைப் போல் நடமாட ஆறு மாதங்கள் முதல் இரண்டு ஆண்டுகள் வரை ஆகலாம்.

அதற்குப் பிறகு படிப்படியாக பேச்சுப் பயிற்சி பெற்ற பிறகே இயல்பு நிலையை அடையும். குறிப்பாக பிறக்கும் போது 1.5 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள குழந்தைகள் பெரும்பாலும் வாய்பேச முடியாமலும் காது கேட்கும் திறன் இல்லாமலும் இருக்கும். அவ்வாறு உள்ள குழந்தைகள் பிறந்தவுடன் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்படுவர். மூச்சு விட முடியாமல் கஷ்டப்படுவர்.

ஆனால் இவ்வாறு பிறக்கும் குழந்தைகளுக்கு ஆறு வயது ஆவதற்கு முன்பாகவே இந்த சிகிச்சையை செய்து முடிக்க வேண்டும். 10வயதுக்குப் பிறகு இதுபோன்ற சிகிச்சைகளை செய்யக்கூடாது.

ஏனெனில் 10 வயதுக்குப் பிறகு இது போன்ற சிகிச்சை செய்தால் குணமடைவது கஷ்டம். உலகசுகாதார அமைப்பின் கணக்கெடுப்பின் படி பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் மூன்று குழந்தைகள் காது கேட்காமலும் வாய் பேச முடியாமலும் இருக்கும்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் 300 பேருக்கு இதுவரை 'காக்ளியர் இம்ப்ளான்ட்' சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கே.கே.ஆர் மருத்துவமனையில் இதுவரை 50 குழந்தைகளுக்கு இந்த சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அதிகளவு பணம் தேவைப்படும் காரணத்தால் இந்த சிகிச்சை செய்ய முடியாமல் எத்தனையோ குழந்தைகள் அவதிப்படுகின்றனர்.

ஆனால் கேத்ரீனாவிற்கு இங்கிலாந்திலிருந்து கிடைத்த நன்கொடை மற்றும் உள்ளூரில் திரட்டப்பட்ட நன்கொடையுடன் இந்த சிகிச்சை செய்யப்படவுள்ளது என்றனர்.

# நாகலாந்து நங்கைகளின் கை வண்ணம்



மகளிர் சுய உதவி குழுக்கள் தற்போது பல்வேறு துறைகளில் தங்களது திறனை வெளிப்படுத்தி பணம் சம்பாதித்து வருகின்றனர்.

புதுமையாக தொழில் தொடங்க நினைக்கும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு உதவும் வகையில் உலர்ந்த மலர்கள் தயாரிப்பது எப்படி என்பது சமீபத்தில் கோவை வ.உ.சி பூங்காவில் நடந்த கண்காட்சியில் விளக்கப்பட்டது.

ரோஜா உட்பட பல்வேறு பூக்கள் நீண்ட குச்சியில் பொருத்தப்பட்டு அதில் வண்ணங் கள் கலந்து உலர வைக்கப்படுகிறது. பல்வேறு அளவு, வடிவங்களில் உள்ள இந்த உலர்ந்த பூக்களை வீட்டின் வரவேற்பறைகளிலும், அலுவலகங்களிலும், அலங்காரப் பூக்களாக வைத்துக் கொள்ளலாம். இந்தப் பூக்கள் 5 ரூபாய் முதல் விற்பனை செய்யப்பட்டது. நாகலாந்து மாநில மகளிர் சுய உதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட இந்த மலர்கள்கண்காட்சிக்குவந்த அனை வரையும் கவர்ந்தது.

## வெளிநாட்டு வினோதங்கள்

# தங்கத்தின் தரம் காட்டும் கரட் மீற்றர்



இங்கும் சரி எங்கும் சரி தங்க நகைகளை விரும்பாத பெண்களே கிடையாது. தேவைகள் அதிகமாகிவிட்டதால் தங்கத்தின் மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

பலர் தங்களின் சேமிப்புக்களை தங்கத்தில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். இருப்பினும் வாங்கும் தங்கம் தரமானதா? இல்லையா என்பதை துல்லியமாக அறிந்த கொள்ள இயலாமல் தவித்து வந்தனர். பொதுவாக தங்க நகைகள் 18, 22, 24 ஆகிய கரட்டுக்களில் விற்பனை செய்யப்படுகிறது.

தங்க நகைகளை முழுவதுமாக தங்கத்தில் செய்ய முடியாது. செப்பு, வெள்ளி கலந்துதான் தங்க நகைகள் செய்யப்படுகின்றன.

இதில் 18 கரட் தங்கத்தில் இந்த உலோகங்களின் சதவீதம் அதிகமாகவும் 22 கரட் நகைகளில் மிக குறைவாகவும் இருக்கும். 24 கரட் தங்கம் என்பது சுத்தமான தங்கமாகும். தங்கத்தின் தரத்தை அறிந்து கொள்ள கரட் மீற்றர் உதவுகிறது.

இந்தக் கரட் மீற்றர் மூலம் வாடிக்கையாளர்கள் தாங்கள் வாங்கும் தங்க நகை எத்தகைய தரமுடையது என ஒரு நிமிடத்தில் அறிந்து கொள்ளலாம். இக்கருவி கணனி மூலம் இயங்குகிறது.

தரம் அறிய விரும்பும் நகை கரட் மீற்றரில் வைக்கப்படும். கருவியினுள் இருக்கும் மிகச் சிறிய கமரா அந்த நகையை படம் பிடித்து கணனித் திரையில் காட்டுவதுடன் நகையின் கரட் அளவையும் துல்லியமாக காட்டும். இதில் 916 அல்லது அதற்கு மேல் காட்டினால் அது சுத்தமான தங்கம் என்று அர்த்தம். 916 என்ற அளவுக்கு கீழ் காட்டினால் அதில் தங்கத்தில் மற்ற உலோகங்களின் கலப்பு அதிகம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

தங்க நகை தயாரிப்பின் போது நகையில் இரு முனைகளை இணைக்க கேடியம் என்ற பொருளை பயன்படுத்துகின்றனர்.

இந்த முறையில் சேதாரம் சற்று அதிகமாக இருப்பதுடன் பினிஷிங் அவ்வளவு நன்றாக இருக்காது. ஆனால் இண்டியம் என்ற பொருளைக் கொண்டு நகைகள் இணைக்கப்படும் போது சேதாரம் மிகக் குறைவாக இருப்பதுடன் பினிஷிங் நன்றாக இருக்கும். இவ்வாறு தயாரிக்கப்படும் நகைகள் அதன் கரட் தன்மைக்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

# இத்தாலியர் விரும்பிய குங்குமப் பொட்டு



குங்குமப் பொட்டு வைப்பது திருநீறு பூசிக்கொள்வது என பல பண்பாட்டு விஷயங்கள் தமிழகத்தில் சிலரால் கேலியாக பேசப்பட்டு வரும் நிலையில் இத்தாலியர்கள் இதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

சமீபத்தில் இத் தாலி நாட்டு ரோட்டரி கிளப்பை சேர்ந்தவர்கள் தழகத்திற்கு கலாசார பரிமாற்ற குழுவாக சுற்றுலா வந்தனர். சென்னை, சேலம், மதுரை, திண்டுக்கல், கொடைக்கானல்உள்ளிட்ட பல இடங்களை சுற்றிப் பார்த்த சுற்றுலா பயணிகள் இறுதியாக புதுக்கோட்டைக்கு வந்தனர். அவர்களை அங்குள்ள ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் மாலையிட்டு குங்குமப் பொட்டு வைத்து வரவேற்றனர்.

இதில் மகிழ்ந்து போன இத்தாலியர்கள் தமிழ் நாட்டு கலாசாரம் கூட்டு குடும்பம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் எல்லாம் எங்களுக்கு மிகவும் பிடித்துள்ளது. குங்குமப் பொட்டு வைப்பது எங்களுக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது. எப்பொழுதும் குங்குமப் பொட்டு வைத்துக் கொள்வதில் நாங்கள் பெருமை அடைகின்றோம் என்றனர்.

# நவீனமயமாகும் நேரு ஸ்டேடியம்

ஒலிம்பிக்கில் மிகச் சிறிய நாடுகள் கூட தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வாங்கும் நிலையில் இந்தியா இதில் சாதிக்க முடியாத நிலையே இருந்து வருகிறது.

இதற்கு சர்வதேச தரத்தில் அமைந்த பயிற்சி மைதானங்கள் வீரர்களுக்கு தேவையான நவீன கருவிகள் இல்லாதே காரணம்.

இதை உணர்ந்து தடகள வீரர்கள் சிறப்பான பயிற்சியை பெற சென்னையில் நேரு ஸ்டேடியம் நவீனப்படுத்தப்பட்டது.

அடுத்த கட்டமாக கோவையில் உள்ள நேரு ஸ்டேடியமும் நவீனப்படுத்தப்படுகிறது. மொத்தம் 2.5 கோடி ரூபாய் செலவில் நவீன ஓடுதளம் அமைக்கும் பணி தற்போது தொடங்கியுள்ளது.



சர்வதேச தரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இங்கு சிந்தடிக் டிரக் எனப்படும் நவீன ரப்பர் ஓடுதளத்தை அமைத்து வருகிறது. நான்கு மாதங்களில் பணிகள் முடிந்து வீரர்களின் பயிற்சிக்கு இந்த நேரு ஸ்டேடியம் கிடைக்கவுள்ளது. இதன் மூலம் அடுத்த ஒலிம்பிகிலாவது தங்கப் பதக்கங்களை இந்திய வீரர்கள் தட்டி வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# கதிர்காமர் கொலை தொடர்பில் கைதானவருக்கும் ஐ.தே.கா நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தொடர்பு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள நபருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பது குற்றத் தடுப்பு புலனாய்வுத் துறையினரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கதிர்காமரைச் சுட்டுக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் வீட்டின் தோட்ட வேலைகளைச் செய்து வந்த தேவன் என்பவர் கதிர்காமரின் கொலையை அடுத்து கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

இவர் வழங்கிய தகவல் மூலம் கதிர்காமர் கொலை தொடர்பான விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தனக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காணி ஒன்றை அன்பளிப்புச் செய்ததாக அவர் வழங்கிய தகவலையடுத்து கதிர்காமர் கொலையில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது கதிர்காமரின் கொலை தொடர்பில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் அரசாங்கம் இதனை மூடிமறைக்கும் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும், வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு ஒன்றிற்கும் நெருக்கமான தொடர்புகள் இருப்பதால் அந்த நாடாளுமன்ற உறுப்பினரை விசாரணைக்கு உட்படுத்துவது, வேண்டத்தாகாத விளைவுகளை ஏற்படுத்துமென உயர் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயத்தை மூடிமறைப்பதற்கு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கு)

## மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் சமூகக்கல்வி மன்றம் நடத்தும் மகளிர் தின விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு சமூகக்கல்வி மன்றத் தலைவர் லோ.ரஞ்சனராஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பியும், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தருமாகிய செல்வி நா.செல்லம்மாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-9)

# ஜெனீவாவில் மேற்கொண்ட தீர்மானங்களை ஒருபோதும் விட்டுக் கொடுக்கக்கூடாது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமீபத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை சொந்தக் காரணங்களுக்காக விட்டுக் கொடுக்கக்கூடாது என்று அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நேற்று இது தொடர்பில் அவர் ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தீர்மானங்களை மேலும் பயன்படுத்துவதற்கென திட்டவட்டமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கு இரண்டாவது சுற்றில் திர்வுகள் காணப்படவேண்டும்.

பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை சம்பந்தமாகவும் சர்ச்சைகள் எழுந்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வது சம்பந்தமாக இரு தரப்பினரும் பொதுவாக இணக்கப்பாட்டைக் கொண்டிருக்க வேண் டும்.

அதேவேளை, அடுத்த சுற்றுப் பேச்சுக்களை வெற்றியடைச் செய்வதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமும், தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் உள்ளது என்றார்.

இதேவேளை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் திணைக்கள விரிவுரையாளர் எஸ்.ஹெட்டிகே இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வெற்றியடைய வேண்டுமானால் இரு தரப்பினரும் தத்தமது இலட்சியங்கள் தொடர்பில் தெளிவான கருத்துக்களை கொண்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

ஜெனீவா பேச்சுவார்த்தையை தொடர்ந்து வடக்கு மற்றும் தெற்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பரஸ்பர நல்லிணக்கங்கள் ஏற்பட்டு வருவதாகவும் இது ஒரு ஆக்கபூர்வமான அறிகுறி என்றும் விரிவுரையாளர் மேலும் தெரிவித்தார். (த-9)

## வவுனியா சிதம்பரபுரம் முகாமில்

# அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் 625 குடும்பங்கள்





(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் அகதிகள் முகாமில் எந்தவித அடிப்டை வசதிகளும் இன்றி 625 குடும்பங்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

1990ஆம் ஆண்டு வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து இந்த முகாமில் வசித்து வரும் மக்களே இவ்வாறு அவல நிலையில் உள்ளனர்.

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து முதல் இன்று வரை தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இந்த முகாமில் தாம் அவல வாழக்கை வாழ்ந்து வருவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

15 ஆண்டுகளாகியும் இன்றுவரை அரசால் ஒரு கொட்டில் வீடு மட்டுமே தமக்கு அமைத்துத் தரப்பட்டுள்ளது எனவும், ஏனைய எந்த உதவிகளும் செய்து தரப்படவில்லை என்றும் தெரிவிக்கும் அவர்கள் உணவு, குடிநீர் சுகாதாரம் என்பன குறைந்த நிலையில் காணப்படுவதனால் அன்றாட தேவைகளை நிறைவேற்ற பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக குறிப்பிட்டுள்ளனர். (கு)

# உறுதியளிக்கப்பட்ட வீடுகள் 498; கட்டி முடிந்ததோ 4 வீடுகள்

## அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தில் அசமந்தம்

(நல்லூர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி தெற்கு, தாளையடி மக்களுக்கு 498 வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்த அவுஸ்திரேலியா செஞ்சிலுவைச் சங்கம் இதுவரையில் நான்கு வீடுகளை மாத்திரமே அமைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

சுனாமி நிகழ்வு இடம்பெற்று பதின்நான்கு மாதங்கள் முடிந்தும் அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட 498 வீடுகளும் இதுவரை கட்டிக் கொடுக்கப்படாததால் இப்பகுதி மக்கள் மழையிலும் வெய்யிலிலும் பெரும் பாதிப்படைந்து வருந்தாகவும் இந்த் வீட்டுத் திட்டம் விரைவில் முடியுமென எதிர்பார்ப்புடன் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் மிகுதி வீடுகள் எப்பொழுது முடியுமென எதிர்பாாத்த வண்ணமிருப்பதாகவும் தெரிகிறது.

இவ் வீட்டுத் திட்டம் மந்த கதியில் இடம்பெறுவதைக் கருத்திலெடுத்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீட்டுத் திட்ட வேலைகளை துரிதகதியில் நடைபெற நடவடிக்கை எடுப்பார்களா என்று அப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (து-134)

## கலாநிதி பட்டம் பெற்ற கல்வியியல்துறை விரிவுரையாளர்



யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜெயலட்சுமி இராஜநாயகம் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

அண்மையில் இப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே தமிழக ஆளுநர் எஸ்.சுஜித்சிங்பர்னாலா இவருக்கான பட்டத்தை வழங்கினார்.

இவர் இந்தியக் கல்லூரி மரபின் ஆன்மீக விழுமியங்களும், இலங்கையில் அவற்றின் தாக்கமும் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப்பட்டத்தைப் பெற்றிருக்கிறார்.

யாழ்.பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளராகவும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகப் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றி வரும் இவர் 'சமுதாயக் கல்வி' என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த இவர் யாழ்.மாநகரசபை கணக்காளர் எஸ்.இராசநாயகத்தின் துணைவியாருமாவார். (து-52)

# அரசியலில் நண்பர்களும் இல்லை எதிரிகளும் இல்லை

பொடா சட்டத்தின் கீழ் முதலமைச்சர் ஜெயலலிதாவால் 19 மாதங்கள் சிறையில டைக்கப்பட்ட பின்னர் ஜாமீனில் வெளியான வை.கோ. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து தேர்தலைச் சந்தித்தார். தொடர்ந்து 2 ஆண்டுகளாக தி.மு.க அணியில் இடம்பெற்றிருந்த வை.கோ நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பாக தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசியபோது தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.க நீடிப்பது உறுதி என்று கூறினார்.

இந்நிலையில் அ.தி.மு.க பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் திடீரென வை.கோ. சந்தித்துப் பேசினார் சுமார் 30 நிமிட நேரச் சந்திப்புக்குப் பின்னர் ஜெயலலிதா - வை.கோ. இருவரும் செய்தியாளர்களுக்குக் கூட்டாகப் பேட்டியளித்தனர். அப்போது சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணி அமைக்க உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். இக் கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு 35 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கூறினர்.

19 மாதகாலம் பொடா சட்டத்தின்கீழ் வை.கோ.வை சிறையிலடைத்த ஜெயலலிதாவுடன் ம.தி.மு.க கூட்டணி ஏற்படுத்தியிருப்பது தமிழக மக்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு மேலாக ஜெயலலிதாவுக்கு எதிரணியாக இருந்த வை.கோ. திடீரென்று அணி மாறியிருப்பது கேலிக்கூத்தாக இருப்பதாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசியதற்காக 2002ஆம் ஆண்டு வை.கோ. மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய ஜெயலலிதா உத்தரவிட்டார். அப்போது அமெரிக்காவிலிருந்த வை.கோ. சென்னை திரும்பியபோது விமான நிலையத்திலேயே அவரைப் பொலிஸார் சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

ம.தி.மு.க. வின் த்லைமை அலுவலகத்திலும், சென்னை அண்ணா நகர் மற்றும் கலிங்கப்பட்டியிலுள்ள வை.கோ.வின் வீடுகளிலும் தமிழகப் பொலிஸார் தீவிர சோதனை நடத்தினர். இது தவிர, வை.கோ மீதிருந்த பழைய தேர்தல் வழக்கொன்றையும் ஜெயலலிதா தூசு தட்டி எடுத்தார். இதனால் பல்வேறு நீதிமன்றங்களுக்கு அலைக்கழிக்கப்பட்ட வை.கோ. தமிழகத்தில் ஜெயலலிதாதான் வன்முறை வெறியாட்டத்தைத் தூண்டிவிடுவதாகக் கூறினார்.

''... தமிழ் நாட்டில் வன்முறையைத் தூண்டி விடுவதில் ஜெயலலிதாதான் முதலிடம் வகிக்கிறார். இவரது ஆட்சியின் போது வழக்கறிஞர்கள் வீடு புகுந்து தாக்கப்பட்டனர். அவர்களது கை, கால்கள் ஒடிக்கப்பட்டன. வெட்டப்பட்டன. இவ்வளவு வன்முறைகளையும் ஏவி விட்டவர் ஜெயலலிதாதான்''.

ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்த தி.மு.க பொடா சட்டத்

## வை.கோ. - ஜெயலலிதா கூட்டு வெளிப்படுத்தும் உண்மை

தைத் திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியது. அத்துடன் வை.கோ.வை வேலூர் சிறையில் மூன்று முறை சந்தித்த கருணாநிதி அவரை விடுதலை செய்யக் கோரி பொதுக் கூட்டங்கள், விழிப்புக் கருத்தரங்குகளை நடத்தினார். அதே நேரத்தில் வை.கோவை எக் காரணம் கொண்டும் விடுவிக்கக் கூடாது என உச்ச நீதிமன்றம் வரை சென்றவர் ஜெயலலிதா.

தமிழகத்தில் அமைதி நிலவவேண்டுமானால் தீவிரவாதத்தை ஆதரிக்கும் ம.தி.மு.க.வை தடை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை ஜெயலலிதா வற்புறுத்தினார். இந்த நிலையில் 19 மாதச் சிறை வாசத்துக்குப் பிறகு கருணாநிதியின் முயற்சியால் வெளியே வந்த வை.கோ. தன்னைச் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்திய ஜெயலலிதா ஆட்சியை அகற்றுவதே தன்னுடைய நோக்கம் என்று சூளுரைத்தார்.

''... கல்லூரி மாணவிகள் மீது பெற்றோலை ஊற்றித் தீயிட்டுக் கொழுத்தினார்கள். இதில் மூன்று கல்லூரி மாணவிகள் கொல்லப்பட்டார்கள். பெற்றோர் வயிறு பற்றி எரிந்திருக்கும். கொலை செய்வதும் குற்றம். கொலை செய்யத் தூண்டுவதும் குற்றம். இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பான, இன்று பதவியிலிருக்கும் ஜெயலலிதா குண்டர்களை ஏவி விட்டதன் காரணமாக இந்தக் கொலைகள்''

ஜெயலலிதா ஆட்சியை அகற்றக் கோரி வை.கோ. நடைப்பயணம் மேற்கொண்டார். இதன் பின்னர் 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் ம.தி.மு.க கூட்டணி வைத்துக் கொண்டது. தொடர்ந்து தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றிருந்த வை.கோ ஜெயலலிதாவின் ஆட்சிக்கெதிரான பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்றார். இந்தச் சூழலில் கடந்த வாரம் கருணாநிதியைச் சந்தித்த வை.கோ.வரவுள்ள சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க அணியின் வெற்றிக்காகப் பாடுபடுவேன் என்றார்.

''தி.மு.க கூட்டணி இந்தத் தேர்தல் களத்தில் மகத்தான வெற்றிபெறும். கலைஞர் கருணாநிதி மக்கள் தீர்ப்பின் மூலமாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்கவிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு தேர்தலை சந்திக்கிறோம்''

இந்நிலையில் தீவிரவாதத்தை ஆதரிக்கும் ம.தி.மு.க வை தடைசெய்யவேண்டுமென்று கூறி வந்த ஜெயலலிதாவும், அ.தி.மு.க அரசை அகற்றுவதே நோக்கமெனச் சூளுரைத்த வை.கோவும் தேர்தலுக்காக மீண்டும் ஒரே அணியில் சேர்ந்துள்ளனர்.

பதவியில் வெறிபிடித்த ஜெயலலிதாவை மக்களின் சக்தியைக் கொண்டு தூக்கி எறிவோம் எனக்கூறிய வை.கோ'இப்பொழுது ம.தி.மு.கவின் வெற்றிக்காக அ.தி.மு.கவும், அ.தி.மு.கவின் வெற்றிக்காக ம.தி.மு.கவும் கரங்கோர்த்து உழைக்கும் என்று கூறுகிறார்.

தேர்தலுக்காகக் கட்சிகள் இடம்மாறுவது இயல்புதான். ஆனால் கடந்த 4 ஆண்டுகளாக எதிரெதிர் முகாமிலிருந்த அ.தி.மு.க.வும், ம.தி.மு.கவும் ஒரே நாளில் கூட்டணி சேர்ந்திருப்பது அரசியல் சந்தர்ப்பவாதம் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகும்.

தொகுப்பு: ராஜ்

# 'ஏன் மாறினேன்?'

## வைகோ பரபரப்பு பேட்டி



நான்காண்டு காலமாக தி.மு.க.வுடன் இருந்த உறவை அறுத்துக் கொண்டு அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்துள்ளார் வைகோ. கடந்த காலங்களில் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் மறந்துவிட்டு ம.தி.மு.கவும், அ.தி.மு.க.வும் தோழமை கொண்டுள்ளதற்கு என்ன காரணம்? யார் காரணம்? என்பதை பற்றி மனம் விட்டுப் பேசினார் வைகோ. அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்த பிறகு ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ 'தினமலர்' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி.

**நீங்கள் அ.தி.மு.கவுடன் அணி சேர்ந்த பிறகு உங்கள் கட்சித் தொண்டர்கள் என்ன சொல்கின்றனர்?**

நூற்றுக்கு 101 சதவீதம் பேர் இந்த முடிவை வரவேற்கின்றனர். அவர்களின் கருத்துப்படிதான் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்துள்ளோம்.

**தி.மு.க.வில் மூன்று தொகுதிகள் கிடைக்காதது தான் நீங்கள் விலகியதற்குக் காரணமா?**

இல்லை. அவர்களது அணுகுமுறையே காரணம். நம்ப வைத்துக் கழுத்தறுப்பார்கள் என்ற எண்ணம் எங்கள் கட்சியினர் மத்தியில் ஏற்பட்டு விட்டது. நான் கருணாநிதியிடம் 25 தொகுதிகள் கேட்டபோது தர ஒப்புக்கொண்டார். பின்னர் 22 தொகுதிகள் என்று சொன்னபோது கடைசியாக கெஞ்சிக் கேட்டேன். அவரது மனத்தில் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் பேசினேன். 3ஆம் திகதி காலை நான் கருணாநிதியுடன் பேசியபோது 22 தொகுதிகளுக்கு மேல் தர முடியாது என்றார்.

**தி.மு.க. கூட்டணியில் இருந்தாலும் உங்களை தோற்கடித்து விடுவார்கள் என்ற பயம் ஒரு காரணமா?**

நல்ல எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. நாகரிகமற்ற அணுகுமுறை இருந்தது.

**உங்களது கட் - அவுட் கொளுத்தப்பட்டிருக்கிறதே?**

எனது கட் - அவுட்டை 100 துண்டுகளாக்கி அந்த ஆயிரம் பேர் செருப்பால் அடித்துள்ளனர். தலைப்பகுதியை மட்டும் தனியாக எடுத்துச் சென்று அசிங்கப்படுத்தியுள்ளனர். அதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. பத்திரிகையாளர்களை அடித்ததுதான் வேதனை.

**பிரசாரத்தின்போது உங்கள் மீதும் வன்முறை தொடரும் என்று நினைக்கிறீர்களா?**

எல்லாவற்றையும் அனுபவித்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். அதைப்பற்றி எல்லாம் நான் கவலைப்படவில்லை.

**நீங்கள் அ.தி.மு.க கூட்டணிக்குப் போய் விட்டதால் மூன்று மாவட்டச் செயலர்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் அவர்கள் தி.மு.கவில் சேரப் போவதாகவும் கூறப்படுகிறதே?**

எங்கள் கட்சி ஒரு இரும்புக் கோட்டை. இங்கிருந்து ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது.

**நீங்கள் அணி மாறியிருப்பது சந்தர்ப்பவாதம் என்று குற்றம் சாட்டப்படுகிறதே?**

எந்தச் சந்தர்ப்பவாதமும் இல்லை. தி.மு.க, அ.தி.மு.க., ம.தி.மு.க ஆகிய மூன்றுமே திராவிட இயக்கங்கள் தான்.

**தி.மு.க, பொதுக்குழுவில் உங்களைப் பற்றிக் கடுமையாக விமர்சித்ததாகக் கூறப்படுகிறதே?**

பலர் பேசியதாக நானும் கேள்விப்பட்டேன். நாங்கள் கூட்டணியில் இருந்தபோது அவர்களை அப்படி பேச அனுமதித்துள்ளனர். அதையும் பொறுத்துக்கொண்டு மாநாட்டுக்குச் செல்ல பேச்சை தயார் செய்தேன். ஆனால், கருணாநிதி நிபந்தனை விதித்தது தான் நாங்கள் வெளியேற காரணமாகிவிட்டது.

**நீங்கள் கேட்கும் தொகுதிகள் அ.தி.மு.க வில் கிடைக்குமா?**

அ.தி.மு.க.வில் குழு அமைக்கப்பட்டுள்ளது. நாங்களும் குழு அமைத்துள்ளோம். அவர்கள் பேசி முடிவு செய்வார்கள்.

**பொடாவில் இருந்து உங்களைக் காப்பாற்றியவரே கருணாநிதி தான். ஆனால், அவருக்குத் துரோகம் செய்துவிட்டு நீங்கள் கூட்டணி மாறிவிட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே?**

தவறான கருத்து. என்னை பொடாவில் கைது செய்தபோது அவர்களது பத்திரிகையில் கேலிச்சித்திரம் வரைந்தவர்கள் தான் இவர்கள். நான் நான்கைந்து மாதங்கள் சிறையில் இருந்தபோது மாறன் வருத்தப்பட்டார். எனக்குக் கடிதம் எழுதினார். அவர் மருத்துவமனையில் இருந்தபோது எனது மகனை நேரில் சென்று பார்க்கும்படி சொன்னேன். அதற்குப் பிறகுதான் ஆதரவு தெரிவித்தனர். பொடா சட்டம் வந்தபோது நாங்கள் எதிர்த்தோம். பார்லிமென்ட்டில் பேசவில்லை. ஆனால், தி.மு.க ஆதரித்து பேசியது. ஓட்டெடுப்புக்கு விடும்போது அமைச்சரவையில் இருந்ததால் வேறு வழியின்றி ஓட்டுப் போட்டோம்.

**தி.மு.க கூட்டணியில் இருந்த வேறு எந்தக் கட்சியாவது அ.தி.மு.க பக்கம் வர வாய்ப்புள்ளதா?**

அது பற்றி முதல்வர் ஜெயலலிதாதான் முடிவெடுப்பார்.

**ஸ்டாலின் முதல்வர் ஆவதை தடுப்பதற்காகவே இந்த முடிவை எடுத்தீர்கள் என்கிறார்களே?**

அவர்கள் வெற்றி பெறப் போவதில்லை. எதற்கு அந்தப் பேச்சு. (து)

# தி.மு.க. மாநாட்டில் சோனியா காந்தி

(திருச்சி)


சேது சமுத்திர திட்டம், தமிழ்மொழி செம்மொழியாக அறிவிப்பு உட்பட பல்வேறு திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. இது தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களின் சாதனை. எனவே, தமிழகத்தில் அ.தி.மு.கவின் தவறான ஆட்சியிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். கருணாநிதி தலைமையில் விரைவில் ஆட்சி மாற்றத்தைச் சந்திக்க வேண்டும். இதற்கு கூட்டணிக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் எனக் காங்கிரஸ் தலைவர் சோனியா பேசினார்.

இந்திய வலம்

திருச்சியில் நேற்றுமுன்தினம் நடந்த தி.மு.க மாநாட்டில் சோனியா மேலும் பேசியதாவது,

தமிழக மக்களின் மகத்தான ஆதரவால் தான், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைவது சாத்தியமானது.

இதற்காக ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் சிற்பிகளில் ஒருவரான தி.மு.க தலைவர் கருணாநிதி வழங்கிய ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் நான் மறக்க மாட்டேன். அ.தி.மு.கவின் தவறான ஆட்சியிலிருந்து தமிழக மக்கள் விடுபட வேண்டும் கருணாநிதி தலைமையில் விரைவில் ஆட்சி மாற்றத்தைச் சந்திக்க வேண்டும் என்றார். (து)



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

68 மீள்பார்வை



எம்.ஜி.ஆருடன்...

### தனிக்கட்சி

டி.எஸ்.என்: இந்திராகாந்திக்குப் பிறகு ராஜீவ்காந்தி காலத்தில் நீங்கள் சிறிது காலம் காங்கிரஸில் இருந்துவிட்டு பிறகு விலகி விட்டீர்களே ஏன்?

சிவாஜி: ராஜீவ் காந்தியின் அரசியல் வரலாற்றிலும் எனக்கு ஒரு பங்கு இருந்தது. ராஜீவ்காந்தி பிரதம மந்திரியாக ஆவதற்கு நானும் பாடுபட்டிருக்கிறேன். அதை மறக்க முடியாதல்லவா. எலெக்ஷனுக்கு முன்னால் ஒரு தடவை சென்னையில் கவர்னர் மாளிகையில் ராஜீவ்காந்தியை நெருக்கமாகச் சந்தித்தேன்.



என்.டி.ஆர்.நாகேஸ்வரராவுடன்.

நிறையக் கரையான் நமது கட்சிக்குள்ளேயே இருக்கிறது. அதை ஒழிக்க வேண்டும். இல்லை என்றால் நீங்கள் வரமுடியாது என்று குறிப்பாகச் சொன்னேன். அப்போதே ராஜீவ்காந்திக்கு மு[illegible]மெல்லாம் சிவந்து விட்டது. என்னடா இவன் இப்படி கூறுகி றானே என்று மிக டெலிகேட்டான விஷயமல்லவா!

உடனே நம்மூரில் என்ன செய்தார்கள் தெரியுமா? இதுதான் சமயமென்று நம்மைக் கழட்டி விடப் பார்த்தார்கள். என்னைப் பற்றித் தவறான செய்திகளை ராஜீவ்காந்தியிடம் சொன்னார்கள். என்னை ஒரு டம்பியாக்கினார்கள். அப்பொழுது இந்தக் கட்சியே வேண்டாம் என்றும் இதில் மேலும் நீடித்தால் நம்மைக் கேவலப்படுத்தி விடுவார்கள் என்றும் நினைத்தேன். ஆகவே கட்சியில் இருந்து விலகினேன். நான் விலகிய பிறகு கூட டெல்லியிலிருந்து எனக்கு அடிக்கடி தொலைபேசி மூலம் அழைப்பு வந்து கொண்டே இருந்தது. நான் என் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

அப்போதுதான் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் எல்லோரும் த. காங்கிரஸ், மு.காங்கிரஸ், வ.காங்கிரஸ் என்றெல்லாம் ஆரம்பித்தார்கள். எனக்கு அது மாதிரிக் கூட்டத்தில் சேர வேண்டுமென்ற விருப்பமில்லை. அப்போது செயல்பட்டுக்கொண்டிருந்த காங்கிரஸின் கொள்கைகள் பிடிக்காமல் தானே வெளியில் வந்தேன். பிறகு எப்படி அந்தக் கட்சியின் பெயரையே பின்னணியாகக் கொண்ட கட்சியில் சேர முடியும்? எனக்கு அதில் உடன்பாடு இல்லை. என்னோடு இருந்தவர்கள் நிறையப்பேர் அரசியல்வாதிகள். அவர்கள் அரசியலில் இருந்தால்தான் வாழ்க்கையை நடத்தமுடியும். சாப்பிடமுடியும். அவர்களுடைய வேலையே அரசியல் தான்.



ஏ.வி.எம். சரவணனைப் பாராட்டி அன்னை இல்லத்தில் நடந்த விருந்தில்...

நான் எனக்காக இல்லாவிட்டாலும் அவர்களுக்காகவாவது கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டேன். என்னால் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் சிவனே என்று கட்சியை விட்டு விலகி வந்தேன்.

என்னுடன் உள்ளவர்கள் நீ தான் பெரியவன். நீ கட்சி ஆரம்பித்தால் பெரிய ஆளாக வந்து விடுவாய். உன்னை நம்பித்தான் நாங்களும் இருக்கிறோம் என்று எனக்குத் தூபம் போட்டார்கள். அவையெல்லாம் உண்மையென்று நம்பி நானும் ஒரு தனிக் கட்சி ஆரம்பித்தேன். அது தான் தமிழக முன்னேற்ற முன்னணி.

டி.எஸ்.என் : இந்த நிகழ்ச்சியைக் கூர்ந்து கவனிக்கும்பொழுது உங்களுக்கே உரிய தன்மான உணர்ச்சியும் கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் சேர்ந்து உங்களை ஒரு புதுக் கட்சி ஆரம்பிக்கத் தூண்டியது என்று கூறலாமா?



ராஜ்குமாருடன்...

சிவாஜி: தன்மானம் என்பது எல்லோருக்கும் உள்ளது தான். நான் கொஞ்சம் அதிக தன்மானம் உள்ளவன். அந்த உணர்ச்சியால்தான் கட்சியில் என்னை மதிக்காதபோதும் கொள்கைகள் பிடிக்காத போதும் நான் வெளியே வந்தேன். காங்கிரஸில் இருந்தவர்கள் அதிகம் பேர் என்னுடன் வரவில்லை. சிவாஜி ரசிகர் மன்றத்துப் பிள்ளைகள் தான் என் னுடன் அதிகம்பேர் வந்தார்கள். அவர் களே எனக்கு உறுதுணையாகவும் இருந்தார்கள். ஆகை யால் தான் இவர்களுக்காகவாவது கட்சியை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் எண்ணினேன். நான் வங்கி மற்றும் பல இடங்களில் கடன் வாங்கி கட்சி ஆரம்பித்தேன்.

அந்த நேரம் எம்.ஜி.ஆர் அவர்கள் இறந்து விட்டார்கள். அவருக்குப் பதிலாக ஜானகி அம்மாள் இருபது நாள், முதல் மந்திரியாக இருந்தார்கள்.

அப்போது சட்டமன்றத்துக்கு தேர்தல் வந்தது. ஜானகி அம்மையார் அணியும் நானும் ஒன்றாகத் தேர்தலில் நின்றால் ஜெயித்து விடலாம் என்று பலபேர் கூறினார்கள். அதுபோலவே நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தோம்.

இருந்தாலும் எனக்குத் தேர்தலில் நிற்பதற்குத் தயக்கம் இருந்தது. ஏனென்றால் நான் கட்சி ஆரம்பித்து மிகக் குறைந்த நாட்கள்தான் ஆகியிருந்தன. கட்சியானது அப்போது முழுமையாக வளர்ச்சியடைந்து மக்களின் நம்பிக்கையைப் பெற அவகாசம் இல்லை. (தொடரும்)

## தவக்கால சிந்தனை

"ஆண்டவர், நீதிமான்களை அனைத்து இடுக்கண்ணினின்றும் விடுவிக்கின்றார்"


யாவே இறைவனை "அப்பா" என்றழைப்பதா? பழைய உடன்படிக்கைப் புத்தகத்திலே ஆயிரக்கணக்கான மன்றாட்டுக்கள் இருந்தும் எந்த மன்றாட்டும் கடவுளை "அப்பா" என்றழைக்கத் துணியவில்லை! பழைய ஆகம ஆன்மீகத்தில் கடவுளை அச்சம் கலந்த மரியாதையின் தூரத்தில் வைத்ததேயன்றி கடவுளை நெருங்கிச் செல்ல துணிவை தரவில்லை! ஆனால் கடவுளைத் தனக் குள் தாங்கி மண்ணுக்கு வந்த இயேசுவே இறைவனைத் தனக்குள் சுமந்ததால் ஒரு குழந்தையைப்போல் அச்சமின்றி, எளிமையாக, நெருக்கமாக அன்பு ததும்ப "அப்பா" என்று எந்நேரமும் அழைக்கிறார். நம்மையும் இந்த ஆழமான அப்பா உறவில் பங்குகொள்ள அழைக் கிறார். இரவிலோ, பகலிலோ, தனிமையிலோ, பொதுவிலோ, மலையின் உச்சியிலோ, பூட்டிய தனி அறையிலோ இறைவனை அப்பா என்று அன் புடன் அழைக்க கற்றுக்கொடுத்த இயேசுவைத் தவிர இறை உறவிற்கு, செபத்திற்கு யார் சரியான பொருள் சொல்ல முடியும்? என் இதய வீட்டில் எப்போதும் மகிழ்ச்சியே! காரணம் என் அப்பா எப்போதும் என்னோடு!

காவலன்

## படகு கட்டுமான நிலையம் மூதூரில் கையளிப்பு







(மூதூர்)

கிழக்கு கடற்கரைச்சேனையில் இத்தாலிய தொண்டு நிறுவனமான இண்டர் சோஸ்நிறுவனத்தால் அமைக்கப்பட்டிருந்த படகு கட்டுமான நிலையம் மூதூர் கிழக்கு மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தினரிடம் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது மீனவர் சங்கத்தின் அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் தொடக்கத்தில் கடற்புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி புலவர் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார்.

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மு.கிருஷ்ணபிள்ளையிடம் இண்டர் சோஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் பாபரா படகு கட்டுமான நிலையத்தினைக் கையளித்தார்.


மீனவர் சங்க அலுவலகத்தினை பாபராவும் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலனும் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (து)

# லக்னோ கலவரம் சதிவேலையே; முன்னாள் பிரதமர் குற்றச்சாட்டு!

(லக்னோ)

அமெரிக்க அதிபர் புஷ்சின் இந்திய வருகையை எதிர்த்து லக்னோவில் நடந்த ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியதில் சதித்திட்டம் அடங்கியுள்ளது என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் குற்றம் சாட்டி யுள்ளார்.




அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மூன்று நாட்கள் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லக்னோவில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்முறை ஏற்பட்டு பின்னர் வகுப்பு கலவரமாக மாறியதில் நான்குபேர் கொல்லப்பட்டனர். மேலும் 12பேர் படுகாயமடைந்தனர்.

வன்முறை நடக்கும்போது ஜனாதிபதி அப்துல் கலாமும் முன்னாள் பிரதமர் வாஜ்பாயும் ஒரு மருத்துவமனை திறப்புவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக லக்னோ வந்திருந்தனர். இது பற்றி வாஜ்பாய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தக் கலவரம் திட்டமிட்ட சதி வேலை. நட்புறவுக்கும் அமைதிக்கும் லக்னோ பெயர் போனது. இங்கு இது போன்ற கலவரங்கள் நடப்பதை அனுமதிக்கக்கூடாது. இந்த கலவரத்திற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

இந்த இனக்கலவரம் முலாயம் சிங்யாதவ் அரசின் மற்றொரு தோல்வியையே காட்டுகிறது என்று உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் சல்மான் குர்ஷித் குற்றம் சாட்டியுள்ளார். (கு)



இஸ்லாமாபாத் சென்ற ஜோர்ஜ் புஷ் மற்றும் முஷரப் பத்திரிகை நிருபர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிரித்தபடி போஸ் கொடுக்கிறார்கள்.

## பாலஸ்தீனத் தலைவர்களுடன் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பு

(ரஷ்யா)

ரஷ்யத் தலைநகரம் மொஸ்கோவில் பாலஸ்தீனத் தலைவர்களுக்கும், ரஷ்ய வெளிநாட்டமைச்சர் ஷேர்ஜி லவ்ரலுக்கு மிடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பாலஸ்தீனத்துடன் ஏற்கனவே செய் யப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல ரஷ்யா எதிர்பார்த்திருப்பதாக வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெற்ற பாரிய வெற்றியை வரவேற்ற ரஷ்ய வெளிநாட்டமைச்சர் தொடர்ந்து ரஷ்யா-பாலஸ்தீனத்துடன் நல்லுறவைப் பேணும் எனத் தெரிவித்தார்.

இதன்போது பேசிய ஹமாஸ் தலைவர்களில் ஒருவரான ஹாலிக்மொசால் ரஷ்யாவில் ஹமாஸ் இயக்கத்துக்கான அழைப்புக்கு நன்றி தெரிவித்ததுடன், ரஷ்யாவின் தீர்மானங்களுக்கும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஆதரவு ஹமாஸுக்கு இருக்குமெனவும் வெளிநாட்டமைச்சர் மேலும் தெரிவித்தார். ஹமாஸ் இயக்கம் வன்முறைகளைக் கைவிட்டு, இஸ்ரேலை அங்கீகரிக்க முன்வரவேண்டுமென்று மேற்கத்தைய நாடுகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-7)

WORLD NEWS உலக தரிசனம்

## இந்தியாவைப் போல அணுசக்தி ஒப்பந்தம் முஷரப்பின் கோரிக்கையை நிராகரித்தார் ஜோர்ஜ்புஷ்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ் இந்தியாவில் சுற்றுப்பணயத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பாகிஸ்தான் அதிபர் முஷரப்பும், பிரதமர் சவுகத் அஜிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் புஷ்ஷை வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து முஷரப்பும், புஷ்ஷும் நேரடி பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது காஷ்மீர் பிரச்சினை, அல்கெய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள், எப்-16 ரக போர் விமானங்கள், இரு நாடுகள் இடையிலான வர்த்தக ஒப்பந்தம், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் பற்றி இருவரும் ஆலோசனை நடத்தினர்.

அதில் பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை வலுப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது இந்த பேச்சுவார்த்தையின்போது, இந்தியாவுடன் செய்து கொண்டதைப் போன்ற அணுசக்தி ஒப்பந்தத்தை பாகிஸ்தானுடனும் அமெரிக்கா செய்து கொள்ளவேண்டும் என்று முஷரப் வற்புறுத்தியதாக தெரிகிறது.

பேச்சுவார்த்தை முடிந்ததும் நிருபர்களுக்கு பேட்டி அளித்த முஷரப் கருத்துக் கூறுகையில்,

இந்தப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட, காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைக்கு தீர்வு காண அமெரிக்கா தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். தீவிரவாதத்துக்கு எதிரான போர், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை பலப்படுத்த பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டது என்றார்.

அமெரிக்க அதிபர் புஷ் கூறுகையில்,

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண, இரு நாடுகளும் இணைந்து செயல்பட தொடர்ந்து ஆதரவு அளிப்போம். இந்தப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது நடந்துவரும் பேச்சுவார்த்தை நல்ல முடிவை அளிக்கத் தொடங்கியுள்ளது. இருநாட்டு மக்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு, வர்த்தகம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்பட்டபோது, இந்தியா பெருமளவு உதவிகள் செய்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போரை நாங்கள் நடத்திவருகிறோம். அதில் பாகிஸ்தான் முக்கிய பங்குவகித்து வருகிறது. கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது நடந்த தாக்குதலை கண்டிக்கிறேன் என்றார்.

இந்தியாவுடன் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது போல பாகிஸ்தானுடன் அமெரிக்கா ஒப்பந்தம் செய்யுமா என்று கேட்டதற்கு பதிலளித்த புஷ், பாகிஸ்தானுடன் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்யமாட்டோம்என்று சூசகமாக கூறினார். (கு)

## ஈராக்கில் உள்ள அமெ.இராணுவம் அடுத்த வருடம் வெளியேறும்

(லண்டன்)

ஈராக்கில் அமைதியை நிலைநாட்ட பாடுபட்டுவரும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து இராணுவம் 2007ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறிவிடும் என்று இங்கிலாந்து நாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த 12 மாதங்களில் கொஞ்சம் கொஞ்சமாக துருப்புகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். அடுத்த ஆண்டு அமெரிக்க ஆங்கிலப் படைகள் முற்றிலும் விலக்கிக்கொள்ளப்படும் என்றும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

எனினும் துருப்புகள் வெளியேறுவதற் கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று இங்கிலாந்து இராணுவ அமைச்சரகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் இராணுவ வீரர்கள் ஒரு இலட்சத்து 53ஆயிரம் பேர் ஈராக்கில் முகாமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



சோவியத் குடியரசின் முன்னாள் தலைவர் ஸ்டாலினின் 53ஆவது இறந்த தினத்தை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்த மொஸ்கோவில் உள்ள அவரது கல்லறைக்கு மக்கள் வரிசையாக செல்கிறார்கள்.

## ஈராக் சிறையில் குற்றமெதுவும் செய்யாத 4 ஆயிரம் அப்பாவிகள்

(லண்டன்)

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மனித மீறல் செயல்களில் ஈடுபடுவதாக ஏற்கனவே சர்வதேச மனித உரிமை அமைப்பு புகார் கூறியிருந்தது. இப்போது 48பக்கம் கொண்ட புதிய அறிக்கை ஒன்றை மனித உரிமை அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்கா மீது கடுமையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

அமெரிக்கா மற்றும் கூட்டுப்படைகள் ஈராக்கில் கைதிகளை கொடுமைப்படுத்துவதை நிறுத்தவில்லை. மனித உரிமை அமைப்பின் குரலுக்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை.

அபுஹாரிப் ஜெயலில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளை கொடுமைப்படுத்துவதையும் கொஞ்சம்கூட குறைக்கவில்லை. ஜெயிலில் இருக்கும் கைதிகளில் பெரும்பாலானோர் எந்த குற்றமும் செய்யாத அப்பாவிகள். 200பேர் எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் 2 வருடமாக ஜெயிலில் இருக்கிறார்கள் 4 ஆயிரம் பேர் ஒருவருடமாக ஜெயிலில் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு எந்த அடிப்படை உரிமைகளும் வழங்கப்படவில்லை. அவர்களை தினமும் அடித்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். ஜெயிலில் கைதிகளை எப்படி நடத்த வேண்டும் என்று சில விதிமுறைகள் உள்ளன. எதையுமே அமெரிக்கா இராணுவம் கடைப்பிடிக்கவில்லை

43 வயது கமால் முகமது என்பவரை 2 வருடமாக ஜெயிலில் வைத்துள்ளனர். ஆனால் அவர் மீது இதுவரை எந்த குற்றச்சாட்டும் கூறவில்லை.

ஒரு கைதியை பிடித்தால் 90-120 நாட்களில் அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்ய வேண்டும். பிடித்த 24 மணி நேரத்தில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவிக்க வேண்டும். ஆனால் எந்த நடைமுறையையும் சரியாக கடைப்பிடிக்கவில்லை என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (கு)

முக்கியத்துவம் பொருந்திய ஓர் உயரத்தை அடைந்து விடுவது எளிதுதான். ஆனால் அந்த உயர் நிலைமை இழந்துவிடாமல் காப்பாற்றுவதுதான் மிகக் கடினம். -ராஜாஜி

வலம்புரி

## ஈழத் தமிழர் விடயத்தில் வை.கோவின் அணுகுமுறை மாறுமா?

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி செல்வி ஜெயலலிதாவிடம் கூட்டுச் சேர்ந்தமை தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கலைஞர் கருணாநிதியால் போர்வாள் என வர்ணிக்கப்பட்ட வை.கோ. எதிரியுடன் சேர்ந்திருப்பது தி.மு.கவுக்கு அவ்வளவு நல்லதல்ல என்பது மட்டுமே இப்போதைக்குக் கூறிக்கொள்ளமுடியும். இது தமிழ் நாட்டிற்குரிய கருத்து.

மாறாக ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை வை.கோபாலசாமி, அன்று முதல் இன்று வரை ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்தவர் - வருபவர்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசினார் என்பதற்காக 19 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்பதற்காக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் உத்தரவின்படி கைது செய்யப்பட்டவர் வை.கோ. இவை நடந்து முடிந்தவை.

அரசியலில் நிரந்தர நட்பும் இல்லை. நிரந்தர பகையும் இல்லை என்பதை மீண்டும் ஒரு தடவை ஞாபகம் மூட்டும் விதமாக வை.கோ., செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

யார் யாருடன் சேர்ந்தாலும் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதற்கு ஈழத் தமிழர்கள் தயாராகவில்லை.

ஆனால் வை.கோவின் இணைவை அப்படி விட்டு விட முடியாது.

வை.கோவைப் பொறுத்தவரை அவர் ஈழத் தமிழர்களுக்கும் விடுதலைப்போராட்டத்திற்கும் ஆதரவானவர். அதேநேரம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு ஈழத் தமிழர்கள் என்றாலே அலர்ஜி.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் யார் பேசினாலும் அவர்களைப் பிடித்துச் சிறையில் தள்ளு என்ற வாசகமே அம்மையாரிடமிருந்து முதலில் வருவது.

அப்படியானவருடன் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானவர் கூட்டுச் சேர்ந்தால், நிலைமை என்னவாகும்?

ஐயாவின் கரம் ஓங்குமா அல்லது அம்மாவின் பிடி இறுகுமா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி. எதுவாயினும் ஈழப் போராட்டத்திற்குரிய தனது ஆதரவை ஒருபோதும் விலக்கமாட்டேன் என்ற உச்சரிப்பை வை.கோ இப்போதும் உச்சாடனம் செய்கின்றார் என்ற வகையில் திருப்திப்பட முடியும்.

அதேநேரம் வை.கோவுடன் கூட்டுச் சேரும் நோக்குடன் தான் ஜனாதிபதி மகிந்தவின் தமிழ் நாட்டு விஜயத்தை முதல்வர் ஜெயலலிதா அனுமதிக்கவில்லையே என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

சுருங்கக் கூறின் கடந்த சில மாதங்களாக, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் போக்கு வித்தியாசமாகவேயுள்ளது.

இலங்கையரசு தமிழர்களுக்குச் செய்யும் கொடுமையைத் தொடர்ந்து பார்த்திருக்க முடியாது என அண்மையில் ஜெயலலிதா கூறியிருந்தார்.

ஈழத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டிற்குச் சென்றபோதே அவர் மேற்போந்தவாறு கூறியிருந்தார்.

இவ்வாறு ஜெயலலிதா கூறியது அரசியல் அவதானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

ஈழத் தமிழர்களின் விடயத்தில் ஜெயலலிதாவின் மனமாற்றத்திற்குக் காரணம் வை.கோவுடனான கூட்டுச் சேர்வுதான் என்றால் அதனை வரவேற்கலாம்.

எதுவாயினும் தனது சுயநல அரசியலுக்காக, ஈழத் தமிழர்களை வை.கோ உதாசீனம் செய்து விட்டார் என்ற அவப் பெயர் வராமலிருந்தால் அது போதுமானதாகும்.

# வன்னி வீதிகளைப் புனரமைக்க மலேசியாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

மலேசிய கட்டுமானத் தொழில் வளர்ச்சிசபையுடன் வன்னி மாவட்டங்களின் நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை அரசு செய்யவுள்ளது.

மலேசியாவும் இலங்கையும் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளவுள்ளதாக மலேசிய நாட்டின் தொழில் அமைச்சரான தாதுக் எஸ்.சாமிவேலு தெரிவித்துள்ளார்.

இதன்படி வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றை இணைக்கும் 120 கிலோமீற்றர் நெடுஞ்சாலையினைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியன தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களாகும். ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் அப்பிரதேச வீதிகளையும் திருத்தித்தருமாறு மலேசியாவுக்கு விஜயம் செய்துள்ள வர்த்தக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வேண்டுகோள் விடுத்ததாகக் குறிப்பிட்டுள்ள சாமிவேலு மலேசியா- இலங்கை ஆகிய இரண்டு தரப்பினருக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியவுடன் மேற்படி வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (து)

## டீசல் பரல்களுக்குள் பியரை அடைத்துக் கடத்த முயற்சி

பெருமளவு பியர் குடிபானம் அடங்கிய பீப்பாய்களை டீசல் அடைக்கப்பட்ட பரல்களுக்குள் மறைத்து வைத்து யாழ் குடாநாட்டிற்கு கொண்டு வருவதற்குமேற்கொள்ளப்பட்ட முயற்சியை முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து படையினர் முறியடித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

லொறியொன்றில் மறைத்து இவற்றைக் கொண்டு செல்ல முற்பட்டபோதே ஐம்பது பரல்களை இராணுவம் கைப்பற்றியதாக இராணுவ ஊடகப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து-7)

## தேர்தல் பிரசார விளம்பரங்களை அகற்ற தேர்தல் செயலகம் நிதியொதுக்கியது

(கொழும்பு)

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள், கட்டவுட்டுகள் மற்றும் தேர்தல்பிரசார விளம்பரங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு தேவையான நிதியை தேர்தல் செயலகம் ஒதுக்கியுள்ளது.

இதனை முன்னிட்டு தேர்தல் ஆணையாளரினால் 140 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகத்தில் அமைந்துள்ள பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள தேர்தல்பிரசார விளம்பரங்களை அகற்றும் பொருட்டு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த நிதியைக் கொண்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

தேர்தல் விளம்பரங்களை அகற்றுவதற்காக விசேட இயந்திரங்கள் வாடகைக்கு பெறப்பட்டுள்ளதாகவும் அதற்கான தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சில நபர்கள் தேர்தல் சட்டங்களை மீறி தேர்தல்பிரசார சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டிவருவதாக குறிப்பிட்ட அவர் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பிடிவிறாந்துகள் இன்றிக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் தேர்தல் சுவரொட்டிகள் உட்பட பிரசார துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை அச்சிடும் அச்சகங்களையும் முற்றுகையிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (து-9)

## ஸ்ரீ.மு.கா. அரசுடன் இணையவில்லை கட்சித் தலைமை தெரிவித்துள்ளது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் இணையப் போவதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என முஸ்லிம் காங்கிரஸின் தலைமை மறுத்துள்ளது.

முஸ்லிம் மக்களின் எதிர்கால அரசியல் நலன் கருதி அரசாங்கத்தில் இணைவதற்கு தமது கட்சி தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை, குறித்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை எனத் தெரிவித்துள்ளது. (து)

## மின் கட்டண பாக்கி பொலிஸ் சேமநலன் பிரிவுக்கு மின்சாரம் துண்டிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை செலுத்தாமையினால் பொலிஸாரின் சேமநலன் பரிவு அமைந்துள்ள மாடிக் கட்டடத்தின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

6 இலட்சம் ரூபா மின் கட்டணத்தை சேமநலன் பிரிவு மின்சாரசபைக்கு செலுத்தவில்லை. கட்டடத்திற்கு மின்சாரம் கிடைக்காமையினால் அங்கிருக்கும் குளிரூட்டிகள் அனைத்தும் செயற் பாடற்று இருப்பதுடன் அலுவலகத் தேவைகளுக்காக இருக்கும் சுமார் 50 கணனிகளையும் பயன்படுத்த முடியாமல் இருப்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த கட்டடம் அண்மையில்தான் திறந்து வைக்கப்பட்டது. மின்சாரம் இன்மையால் குளிரூட்டிகள் செயற்படாததால் இந்தக் கட்டடத்துள் செயற்பாடுகளை மேற்கொள்வது சிரமமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரிவில் 146 பேர் பணியாற்றுகின்றனர். (க)

## கிராம சேவையாளர் பதவி வெற்றிடங்கள் குறித்து ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

நாட்டில் கிராம சேவையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தவிசேட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமசேவையாளர்கள்சேவையில் ஈடுபடுகின்றனர். இந்நிலையில் கிராமங்களுக்காக ஒதுக்கப்பட்ட கிராம சேவையாளர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்ற கருத்து பரவலாக நிலவிவருகின்றது.

எனவே, இது தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்டுள்ள குழுவானது நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து மக்களின் கருத்துக்களை கேட்டறிவார்கள்.

இறுதியில் மேற்படி குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் மேலதிக கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இதேவேளை, இலங்கை நிர்வாக சேவையிலும் சுமார் 350 பேருக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் போட்டிப் பரீட்சையொன்றினை விரைவில் நடத்தவுள்ளோம் என்றார். (து-9)

## அரசியல் யாப்புச் சபையின் உறுப்பினர் நியமனத்தில் சர்ச்சை

(கொழும்பு)

அரசியல் யாப்புச் சபையின் 6ஆவது உறுப்பினரை நியமிப்பது தொடர்பான சர்ச்சை வலுவடைந்துள்ளது. ஜே.வி. பியின் சார்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உபாலி ஜயசேகர இதற்கு பிரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த உறுப்பினர் பரிந்துரை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கடந்த டிசம்பர் மாதமே நாங்கள் எமது உறுப்பினரை பரிந்துரை செய்துவிட்டோம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அழுத்தத்தால் இது இழுத்தடிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதனிடையே அரசியல் யாப்புச் சபையின் 6ஆவது உறுப்பினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டால் நீதிமன்றத்தை நாடப் போவதாக ஜாதிகஹெல உறுமய எச்சரித்துள்ளது. (து)

## ஐ.தே.கட்சி உறுப்பினர் வீட்டில் ஆயுதம் மீட்பு

(கொழும்பு)

மாத்தறை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.ஆர்.பியசிறியின் வீட்டில் ஆயுதங்களை பறி முதல் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது வீட்டிலிருந்து ஏ.டி 56 ரகதுப்பாக்கி, 9 எம்.எம்.பிஸ்டல் மற்றும் இராணுவச் சீருடை ஆகியவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பியசிறியின் மகன் சுட்டுக்கொலை செய்யப்பட்டதையடுத்து நடத்தப்பட்ட சோதனையின் போது இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து பியசிறி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து)

### தினசரி சிந்தனை
### விவேகச் சிந்தனைகள்



எந்தவொரு தெய்வத்தை வணங்கினாலும் அது மற்ற எல்லாத தெய்வங்களையும் வணங்கியதாகவே ஆகும். இந்த ஒரு தெய்வத்தை வணங்கி மற்ற தெய்வங்களை வழிபடாவிட்டால் மற்ற தெய்வங்கள் கோபிக்குமே என்று நினைக்க வேண்டாம்.

சுவாமி விவேகானந்தர்

# மினிபஸ் தடம்புரண்டதில் மூவர் படுகாயமடைந்தனர்

## திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்று தடம்புரண்டதில் மூவர் படுகாயமடைந்தனர்.



நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் பயணிகளுடன் வந்த குறிப்பிட்ட மினிபஸ் திருநெல்வேலிச்சந்திக்கு அண்மையில் கட்டுப்பாட்டையிழந்து பற்றைக்குள் விலகி தடம்புரண்டது.

மழை காரணமாக மினிபஸ் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டதாக சாரதி கூறியுள்ளார்.

இச் சம்பவத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை திருமதி அலோசியஸ் (வயது-52), புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த த.செல்வராணி (வயது-38), கோண்டாவிலைச் சேர்ந்த க.முருகையா (வயது-40) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தின்போது மேலும் பலர் சிறு காயங்களுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-132,133)

---

## ஜெனீவாக்...

புலிகளின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும். அதேவேளை அடுத்த சுற்றுப் பேச்சின்போது போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும். அதுபோல அரசாங்கம் பாதுகாப்புப் படைகளை உடனடியாக பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஹெல உறுமயவின் தலைவர் வண.எல்லாவல மேதானந்த தேரர் எந்தவொரு ஆயுதக் குழுவின் ஆயுதங்களையும் களைவதற்கு தங்கள் கட்சி அனுமதிக்கப் போவதில்லையென்று குறிப்பிட்டதுடன் இனிவரும் பேச்சுவார்த்தைகள் கொழும்பில் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் ஜீ.எல்.பீரிஸ், கரு ஜெயசூரிய உட்பட முக்கிய அங்கத்தவர்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்கள். (ச-4,5)

## மீனவர்களின்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த கடற்படையினர் அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீன்பிடிப்படகுகள் மீது துப்பாக்கிச் சூடுகளை நடத்தி அந்தப் படகுகளை மீன்பிடியில் ஈடுபடவிடாது அங்கிருந்து விரட்டியடித்துள்ளனர்.

இந்நிலையில் தமது மீன்பிடி வலைகளை கடலில் கைவிட்டு விட்டு மீனவர்கள் தப்பிக் கரையைச் சேர்ந்துள்ளனர். அதேவேளை கரையில் நின்றிருந்த போராளிகள் மீதும் கடற்படையினர் துப்பாக்கிச்சூடுகளை நடத்தியதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

இந்த வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் கடற்படையினரின் செயல்களை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு எழி லன் கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-9)

---

# மீனவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றுமுதல் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் மாதகல், சிந்திப்பந்தல், ஊரணி மற்றும் சேந்தான்குளம் பகுதி மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொழில் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடற்படையினர், மாதகல் கடற்றொழிலாளர்களின் வலைகளை சேதப்படுத்துவது மற்றும் கடலில் தொழிலாளர்களை தாக்கி வருவதைக் கண்டித்து தமது உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட வேண்டும் எனக் கோரி மீனவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை முதல் பகிஷ்கரிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு மாதகல் பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் குழுவிற்கும் கடற்படையின் கட்டளைத் தளபதி ரணவீராவுக்குமிடையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்நிலையில் மாதகல் துறைமுகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் கடற்றொழிலாளர்கள், செயலாளர் க.இதயராஜ் தலைமையில் கலந்து கொண்டார்கள். இதன்போது மீனவர்கள் சார்பில் தமது உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாகவே தொழிலுக்குச் செல்லவில்லையென கட்டளைத் தளபதிக்குத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இத்தகைய செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெற மாட்டாது என கடற்படைக் கட்டளைத் தளபதியினால் தெரிவிக்கப்பட்டதுடன் இதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் கண்காணிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் கடந்த 28.02.2006ஆம் திகதிமுதல் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஜெனீவாவில் இடம்பெறும் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து விடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் க.தவரெட்ணம் தெரிவித்தார். (ச-4)

---

## யாழ்.இந்துக் கல்லூரி முன் கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களால் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சந்திர சிறியின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஒன்று கூடிய மாணவர்கள் இராணுவத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு கொடும்பாவியை இழுத்துச் சென்று பாடசாலையின் முன்னால் எரித்தனர். (ச-130,133)

---

## முஸ்லிம்...

இதனைத் தெரிவித்தார். அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது ஜெகாத் என்ற முஸ்லிம் ஆயுதக்குழுவொன்று கிழக்கில் இயங்குவதாக புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் அது குறித்து எவ்வித உண்மையும் இல்லை. இவ் விடயம் தொடர்பாக அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.(ச-5)

## தலைமைப்...

காரணமாகவே கட்சியின் தலைமைப் பதவி இதுவரை காலமும் செயலாற்றியது போன்று தற்போது செயலாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் கடமையாற்ற பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளது. அத்துடன் எனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும் அவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் இலட்சக்கணக்கான மக்கள் தொழில் வாய்ப்பினை இழந்த காலம் போன்று தற்போது உள்ளது என சந்திரிகா குமாரதுங்காவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மக்களுக்காக பொறுப்பேற்றிருக்கும் சகல காரியங்களையும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்வது தமது வழக்கம் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி, ஜனாதிபதி மகிந்த அடிக்கடி பிரச்சினைகளை ஏற்படுத்த முனைவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-4)

---

## மாணவர்களின் வகுப்புப்...

உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் தெரிவித்துள்ளது.

கல்விச் சமூகத்தினர் மீதான இராணுவத்தின் செயற்பாடுகளைக் கண்டித்தும் தமது வாழ்வுரிமையினை நிலை நாட்டுவதற்காகவும் மாணவர்கள் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

அத்துடன் வடமராட்சி,வலிகாமம் ,தென்மராட்சி பாடசாலைகள் முன்பாக இராணுவத் தளபதியின் கொடும்பாவிகளும் மாணவர்களால் எரிக்கப்பட்டது.

தமிழ் மாணவர்களின் இந்த ஒன்றுபட்ட சக்தியினை யாரும் தனியே பகிஷ்கரிப்புப் போராட்டமாக நினைத்து விடக்கூடாது. இங்குள்ள இராணுவம் எமது எந்த செயற்பாட்டிலும் தலையிட அருகதையற்றவர்கள் என்ற உண்மையினையும் இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்கவே நாம் உள்ளோம். ஒருமைப்பாட்டை நிலை நாட்டவே சிறி லங்கா இராணுவம் இங்குள்ளது என்ற உண்மைக்குப் புறம்பான கருத்தையும் மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் தெளிவாகக் கூறி நிற்கின்றது என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவமாகவே பார்க்கின்றார்கள் என்ற யதார்த்தத்தை புரிந்து கொள்ளுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள். இதனையே எமது மாணவர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் ஊடாக தெளிவாகக் கூறிநிற்கின்றோம்.

இதனையும் ஏற்க மறுத்து இராணுவ மனோநிலையில் இராணுவ மயப்படுத்தலை நிறுத்தாமல் தொடர்ந்தும் எம்மை அடிமைகளாக ஆள நினைத்தால் அது சிறிலங்காவிற்கும் அழிவையே தரும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-132,133,5)

---

## நேரடிப் பேச்சில் கலந்து...

நாட்டில் இரு தசாப்த காலமாக இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மற்றும் அண்மையில் ஜெனீவாவில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் ஆகியன குறித்து ஆராய்வதற்கான அரசியல் கட்சிகள் கலந்து கொண்ட சர்வகட்சி மாநாடு வெற்றிகரமாக நேற்று நடைபெற்றதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் விடுதலைப்புலிகளுடனான விவகாரங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று நடாத்தப்பட்ட மூன்றாவது சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளுமே கலந்து கொண்டன.

ஜெனீவாச் சந்திப்பின் போது யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றி கலந்துரையாடப்பட்டது என விடுதலைப்புலிகளும் அங்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை சீர்திருத்தம் செய்வது குறித்தும் ஆராயப்பட்டது என்று அரச தரப்பு தெரிவித்துவரும் சூழ்நிலையில் இம் மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இம்மாநாடு சுமுகமானதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்தன என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் ஆதரவுக் கட்சியான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையினை நிராகரிப்பதாகவும் அது தொடர்பில் தமது அதிருப்தியினையும் வெளியிட்டன.

இருந்த போதிலும் இறுதிச் சமாதானத்திற்காக முயற்சிகளுக்கு ஏனைய அனைத்துக் கட்சிகளும் அரசாங்கத்திற்கு ஆதரவு தரும் சூழ்நிலையில் தாமும் அந்த முயற்சிகளுக்கு தமது ஆசீர்வாதத்தினை தருவதாக மாநாட்டில் தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

புலிகளுடன் அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் இரு கட்சிகளும் தமது விடாப்பிடிப்புப் போக்கினை கைவிட்டு தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை இப் பேச்சுக்கள் சகல மக்களும் ஏற்கக் கூடிய மற்றும் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்பிற்கும் பாதகம் ஏற்படுத்தாத வகையிலான தீர்வுகளைத் தர வேண்டும் என்றும் அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன. (ச-4)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 07.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.